www.tamilarangam.net

**Q**: *Now that the conditions of the Tamils are really bad in Sri Lanka, don't you think you and Prabhakaran should unite and pool your resources?*

A: We are willing to align with any progressive force. We are not holding back regarding unity. We are all for unity. Ideologically, Prabhakaran's group and my group are different—we want to mobilise a mass organisation for armed struggle led by the working classes, whereas they (Prabhakaran's group) just want to indulge in terrorism, purely to paralyse the army.

*Q: Ultimately what you both want is the same—Tamil Eelam. Achieving this will be all the more difficult if you are divided among yourselves. Have you initiated any unity moves?*

A: About six months ago we gave a call to unite. Most organisations agreed except Prabhakaran's. They also agreed theoretically; but practically they did nothing.

*Q: Did your call for unity include terrorist organisations as well?*

A: We don't classify ourselves as terrorists. We are nationalists. We are not indulging in terrorism. We are not fighting a separatist cause. Ours is a "liberation struggle."

*Q: Which are the organisations that responded to your unity call?*

A: EROS—Eelam Research Organisation—headed by Ratnasabapathi based in London; GUES—General Union of Eelam Students—based in India. We expected Prabhakaran's group to send a representative but it did not.

*Q: Who are the students involved in GUES?*

A: It's a Jaffna students' organisation.

*விடுதலைப்புலிகள் - மே 198*

1ம் பக்கத் தொடர்ச்சி

தலைப் போரிலே முன்னணிப் படையாக நின்று எமது விடுதலை இராணுவம் போராடும். ஏனைய விடுதலைக் குழுக்களும் எம்மோடு அணி சேர்ந்து போராடுவதை நாம் விரும்புகிறோம். சென்னையிலிருந்து கொண்டு 'ஒற்றுமை முயற்சி' என்ற போர்வையில் பிரச்சாரப் போராட்டம் நடத்தி காலத்தை விரயமாக்காமல் போராட்ட களத்திற்கு வருமாறு எனது அன்புத் தோழர்களை அழைக்கிறேன். போர்க்களத்தில் எதிரியை எதிர்கொண்டு போராடும் சூழ்நிலைகள் எமக்குள் ஒருமைப்பாட்டைப் பிறப்பிக்கும். இக்கட்டான சூழ்நிலைகளில் தமிழீழத்திலிருந்து தப்பியோடாமல் மக்களோடு மக்களாக நின்று எதிரியை எதிர்கொண்டு தாக்கி வருவது எமது இயக்கம் என்பதை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெகுஜனத் தொடர்பு என்பது வெடி குண்டுகளைக் காட்டிலும் வலிமையானது.

● ● ●

சுவடு — 3

ஆடி - ஆவணி,

புரட்டாதி - ஐப்பசி

1984

# அரசியல் தத்துவார்த்த விமர்சன ஏடு

எழுச்சி

வானை நோக்கி முஷ்டி உயர்த்தி
வீரகர்ஜனை செய்தது ஆழி.
சீறி எழுந்த கைகள் விரிந்து
பாறை மேனியில் பாய்ந்து அறைந்தன.
கடிய பாறையின் புசிய போர்வையை
பிராண்டிப்பிய்த்தன வெண்ணுரை நகங்கள்
கடலைப் பாறை நெரிக்கும் வரைக்கும்
கடலின் கரங்கட் கேது ஓய்ச்சல் !

-சிவசேகரத்தின் 'நதிக்கரை மூங்கில்'
என்ற கவிதைத் தொகுதியிலிருந்து

இதழ் ஒன்றுக்கு
அன்பளிப்பாகக் கொடுக்க
வேண்டியது 3 ரூபா 50 சதம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கு

## ஆக்கிரமிப்பு யுத்தத்தை புரட்சி யுத்தத்தால் முறியடிப்போம்

அண்மைக் காலங்களில் ஜே. ஆர். இனதும் அத்துலத் முதலியினதும் திமிர்த்தனமான பேச்சுக்களில் இருந்து இன்றைய பாசிச யூ. என். பி. அரசு ஒரு பெரிய யுத்தத்திற்கான தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதென்பது தெளிவாகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் ஏவல் நாயான இஸ்ரேலும் பின்பலமாக இருப்பது ஜே. ஆர். இன் திமிர்ப் பேச்சிற்கு காரணமாகும்.

அண்மையில் நடந்த சம்பவங்களுக்கு இஸ்ரேலிய உளவு நிறுவனமான "மொசாட்" பின்னின்று வழிகாட்டியது உலகிற்கு அம்பலமானதொன்றே. 1970 இல் நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட இஸ்ரேலிய இராஜ தந்திரிகளை பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் மீண்டும் இங்கு அழைத்து வந்ததின் மூலம், இஸ்ரேலிய உளவாளிகளான மொசாட்டையும் இலங்கையில் நுழைய ஜே. ஆர். வழி செய்தான்.

இனவெறியூட்டப்பட்ட சிங்கள இராணுவம் மொசாட்டின் வழி காட்டுதலின் கீழ் பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதுவரை காலமும் வன்முறையை அடக்க அரசு பல யுக்திகளைக் கையாண்டு வந்துள்ளது. மலேசிய, பிலிப்பைன்ஸ் இராணுவ ஆட்சியாளரின் நடைமுறையான 'தீவிரவாதிகளைத் தேடிப்பிடித்து அழித்தல்' (Search and Destroy) எனும் முறையை அரசு கையாண்டு (இன்பம், செல்வம் கொலை) வெற்றி கிடைக்காமையால், வர்த்தக நிறுவனங்களை எரித்தல், இளைஞர்களைத் தேடி வேட்டையாடுதல் என்பவற்றை இவ்வரசு செய்தது. இம்முறைகளும் பயனற்றுப் போகவே, இனவெறி அரசிற்கு உதவ மொசாட் இங்கு குதித்து, தனது இன அழித்தொழிப்பு முறையை இங்கு கையாள வழி காட்டியது.

மொசாட் தனது இன அழித்தொழிப்பு முறைகளான, பலஸ்தீன மக்களை கிராமம் கிராமமாக அடித்துத் துரத்தல், தாக்குதல் நடந்த கிராமத்தையே முற்றாக அழித்தல், முகாம்களில் புகுந்து படுகொலை செய்தல் போன்ற குரூர நடவடிக்கைகளை சிங்கள இராணுவத்துக்கு கற்றுக் கொடுத்தது. இது போலவே அண்மையில் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. அண்மையில் நடந்த சம்பவங்களான கிராமங்கள், நகரங்கள் எரிப்பு, முழுக்கிராம இளைஞர்களையும் கைது செய்தல் என்பன எதிர்கால நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினரால் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன.

ஒருபுறம் வட்டமேசை மகாநாடு எனப் பீற்றிக் கொண்டு மறுபுறம் யுத்தத்திற்கான தயாரிப்பிற்காக, சர்வதேச பிற்போக்கு சக்திகளிடம் இருந்தும், உலக மக்களின் எதிரியான நிறவெறி தென்னாபிரிக்க அரசிடம் இருந்

**மக்கள் படை ஒன்று இல்லாவிடின்**
**மக்களுக்கென ஒன்றுமே இல்லை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உடலுழைப்பில் ஈடுபடும் பெண்கள் கூலிச் சுரண்டலுக்கு உட்படுத்தப் படுகின்றனர். ஆண்கள் செய்யும் வேலையளவு செய்யினும் கூட குறைந்த கூலியே பெண்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. தொழிற்சாலைகளில் பெண்களை வேலைக்கெடுப்பதன் நோக்கம், குறைந்த கூலிக்கு வேலை செய்வார்கள் என்பதும், போராடத் தயங்குவார்கள் என்பதுமே. பொதுவாகவே பெண்கள் உற்பத்தி உறவுகளில் இருந்து அன்னியப் படுத்தப்பட்டுள்ளனர், ''பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க முதற்படியாக உற்பத்தியுறவுகளில் ஈடுபடுவது அவசியமாகும்'' என எங்கெல்ஸ் கூறுகின்றார்.

பெண்ணானவள் ஆண்களை மையமாக வைத்தே வாழவேண்டியவள் என்னும் கருத்தே எம்முள் நிலவுகின்றது. முதலில் தந்தையினாலும், பின் கணவனாலும், வயதான பின் ஆண் பிள்ளைகளினாலும் பராமரிக்கப்பட வேண்டியவளாகவே இருக்கின்றாள். இதனாலேயே குடும்பங்களில் பெண் குழந்தைகளிலும் பார்க்க ஆண் குழந்தைகளின் மீது அதிகளவு பாசம் காட்டப்படுகின்றது. பெண் குழந்தை பிறந்த நாள் முதலே ஒரு சுமையாகவே எல்லோருக்கும் காட்சியளிக்கின்றது.

எமது இலக்கியங்கள் சினிமாக்களில் எல்லாம் பெண்களை ஆபாசமாக வர்ணித்தும் ஆண்களிற்கு பணிவிடை செய்பவர்கள் தான் பெண்கள் என்றும் காண்பிக்கப்படுகின்றது. கணவனுக்கு எல்லா விஷயத்திலும் கட்டுப்பட்டு நடக்கும் பெண் தான் நல்ல பெண்மணி என்றும் கூறப்படுகின்றது. இன்று பெண்களுக்கென்று வெளிவரும் பத்திரிகைகள் கூட கணவன் முன்னே எப்படி நடப்பது, எப்படிச் சமைப்பது குழந்தைகளை எப்படி பராமரிப்பது என்று கூறுகின்றனவே அன்றி பெண்களைப் போராட ஒடுக்குமுறைக் கெதிராகக் கிளர்ந்தெழ வைப்பதில்லை. மொத்தத்தில் இவையெல்லாம் பெண்களை நான்கு சுவர்களுக்குள்ளேயே அடைக்கும் காரணிகளாகின்றன. இன்றைய பத்திரிகைகளில் எது மஞ்சள் பத்திரிகை எது குடும்பப் பத்திரிகை என்று வேறு பிரித்து காணமுடியாது இருக்கின்றது.

ஊசி முதல் தொலைக்காட்சி வரையிலான பொருட்களின் விளம்பரத்திற்கு பெண்களை நிர்வாணப்படுத்தி சுவரொட்டிகளாகவும், வேறு வகைகளிலும் ஆபாசமாகக் காட்டுகின்றனர்.

மதமும் எமது பண்டைய இலக்கியங்களும் பெண்களுக்கு கற்பு நெறியை அழுத்தமாகப் போதிக்கின்றன. கற்பு நெறி உலகையே எரிக்கும் எனும் பண்டைக்கால கதைகளை இன்றும் எம்மக்கள் பேணி வருகின்றனர். ஒரு பக்கமாக தாய் மொழி, தாய் நாடு, பெண் தெய்வம் எனக் கூறிக்கொண்டு மறு பக்கமாக பெண்களை அடிமைப் படுத்தியும் ஆபாசப் படுத்தியும் இச்சமூகம் மகிழ்கின்றது.

சுயாதீனமாக வாழ்வதற்குக்கூட பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இன்று பெண்கள் திருமணங்களில் கூட சுதந்திரமான முடிவு எடுக்க மறுக்கப்படுகின்றனர். இதற்கு சாதிய, வர்க்க சிந்தனைகள் துணை போகின்றன. சாதி, பணம், அழகு என்பனவே திருமணங்களைத் தீர்மானிக்கும் காரணிகளாகின்றன. அன்பு, காதல் போன்றவையெல்லாம் இதற்கு முன் அர்த்தமற்றவையாகி விடுகின்றன. திருமணங்களின் போது வரதட்சணை வாங்குதல் என்ற மரபு, எம்மிடையே நிலவி வருகின்றது. இது ஆரம்ப காலங்களில் மணமக்களுக்கு கொடுக்கும் அன்பளிப்பாகவே கருதப்பட்டது. ஆனால் இன்று பல பெண்களின் வாழ்வினைப் பறிக்கும் ஒன்றாக மாறியுள்ளது. ஆண்கள் தமது உழைப்பினால் சாதிக்க முடியாதவற்றை வரதட்சிணை மூலம் சாதிக்க முற்படுகின்றனர். இன்று எமது நாட்டில் பல பெண்கள் திருமண வயது தாண்டியும் திருமணம் செய்யாது இருப்பது வரதட்சிணைக் கொடுமையினாலேயே.

கணவன் நல்லவனோ கெட்டவனோ ''கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்'' என்ற பழைய பிரமைகளின்படி வாழ்ந்து, கணவன் இருக்கும் போதே பூவோடும் பொட்டோடும் சுமங்கலியாக இருந்து விடவேண்டும் என்கின்ற எண்ணம் முழுப் பெண்களிடை



www.tamilarangam.net

www.tamilarangam.net



யேயும் நிலவுகின்றன. பெண்ணின் இளவயதி லேயே கணவன் இறந்துவிட்டால் கூட, வாழ் நாள் முழுவதுமே விதவையாகவே காலம் கழிக்க வேண்டியிருக்கின்றது. விதவைகள் மறுமணம் செய்துகொள்ளலாம் என்று கூறி னும் இது பெயரளவிலேயே இருக்கின்றது. ஆண்கள் எத்தனை திருமணமும் செய்து கொள்ளலாம் என்று கூறும் இச்சமூகம் பெண் கள் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்து கொண்டால் விபச்சாரி என்று பெயர் சூட்டு கின்றது.

இவற்றின் அடிப்படைகளை மாற்ற எங் கெல்ஸ் பின் வருமாறு கூறுகின்றார். "முதலா ளித்துவ உற்பத்தியும் அது உருவாக்கியுள்ள சொத்து உறவுகளும் அழிக்கப்பட்டு, அதன் பயனாய் வாழக்கைத் துணையைத் தேர்ந்தெடுப் பதில் தற்போது செல்வாக்கு செலுத்திக் கொண்டிருக்கின்ற பிற பொருளாதார அடிப் படைகளும் அகற்றப்படும் போது தான் திரு மணத்தில் முழுச் சுதந்திரம் என்பது நடை முறையில் செயல்பட முடியும். அப்போது தான் பரஸ்பர அன்பு என்பதைத் தவிர வேறு எந்த அடிப்படையும் நிலவாது"

பெண் விடுதலை, முற்போக்கு எனப்பேசும் பல ஆண்கள் பெண்களுடன் ஆரோக்கிய மாகப் பழகுவதில்லை. பெண்களின் முன்னே ஓர் மாதிரியாகவும், முதுகுக்குப் பின்னால் அதே பெண்ணைப் பற்றி நண்பர்களுடன் அழகு, பாலியல் கவர்ச்சி பற்றி வம்பளப் பதையும் காணக் கூடியதாக இருக்கின்றது

முற்போக்கு என்று கூறிக்கொள்ளும் படித்த சில பெண்கள், வெளிநாட்டுக் கலாச் சாரங்களில் மூழ்கி—பியர் குடிப்பது, சிகரட் போதைவஸ்து அருந்துவது, ஆண்கள் போல உடையணிவது மற்றும் எதுவித கட்டுப்பாடும் அற்று திரிவது—சீரழிவது தான் பெண் விடு தலை எனக்காட்ட முற்படுகின்றனர். இவர்கள் எல்லாம் தமது சீரழிவை மறைக்க பெண் விடுதலை என்ற கோசங்களை முகமூடிகளாகப் பாவிக்கின்றனர். பெண் விடுதலை என்று எழுதும் படித்த மேல்மட்ட பெண்கள், தமது மேல்மட்ட குடும்ப உறவுகள், பழக்க வழக்கங் களில் மட்டுமே சமத்துவம் கோருவதுடன் நிறுத்திக் கொள்கின்றனர். இவர்கள் பெண் களின் அடிப்படைப் பிரச்சனைகளான, பொரு ளியல் சமூக நடவடிக்கை, மனித உரிமைகள் பற்றி கவனம் செலுத்தாமல் குட்டிப்பூர்சுவாக் கண்ணோட்டத்தில் தமது சிந்தனையை குறுக் கிக் கொண்டுள்ளனர்.

---

இது யுத்தத்திற்கும், நம்பிக்கைக்கும் இடையே நடக்கும் ஒரு ஓட்டப் பந்தயம். ஒருவிதமான மரணத்திற்கு இன்னொரு விதமான மரணத்திற்குமிடை யே நடக்கும் ஓட்டப் பந்தயம். எது முதலில் வரும்? பாசிசத்தின் சாவா? அல்லது என் சாவா? இது என்னை மட்டும் பொறுத்த தனிப் பிரச்சினையா? இல்லை; இல்லவே இல்லை. இந்தக் கேள்வி ஆயிரக் கணக்கான கைதிகளால், பல்லாயிரக் கணக்கான படையினரால் கேட்கப்படு கின்றது. இது ஐரோப்பாவிலும் உலகம் முழுவதிலும் உள்ள கோடிக்கணக்கான பொதுமக்களாலும் கேட்கப்படுகின்றது. 'சிலருக்கு நம்பிக்கை அதிகம்; சிலருக்குக் குறைவு. ஆனால் அது வெறும் பிரமை. வீண் எண்ணம். முதலாளித்துவம் அழுகி நாற்றமெடுப்பதால் உண்டாகி இருக் கும் பயங்கரங்கள், உலகம் முழுவதிலும் பரவி ஒவ்வொருவரையும் அழிக்கப் பார்க்கின்றன. மிஞ்சி இருப்பவர்கள், "நான் பாசிசத்திற்குப் பிறகும் வாழ் கிறேன்" என்று சொல்வதற்கு முன் ஆயிரம், பதினாயிரக்கணக்கான மக்கள்- எவ்வளவு அருமையானவர்கள் - மடி வார்கள்.

●

"மக்கள் எல்லோரும் உண்மை யிலே மனித உணர்ச்சி உடையவர் களாக ஆகும் வரையில், மனிதர்களாக இருப்பதற்கு வீரத்தனம் மிகவும் அவசிய மாகத் தேவைப்படும்."

தூக்குமேடைக் குறிப்பில்
**யூலியஸ் பூசிக்**

www.tamilarangam.net



பெண்கள் மீதான ஓடுக்துமுறைகள் இவ்வாறு இருக்கும்போது, வெறும் வாய்ப் பேச்சோ, பத்திரிகைகளில் காரசாரமாக எழுதுவதோ தீர்வைக் கொண்டு வரப்போவதில்லை. பெண்களின் விடுதலை சமூக மாற்றத்துடன் சாத்தியமாகுமே தவிர வேறு வழிகளினால் அல்ல. பெண் விடுதலை சமூக மாற்றத்துடன் எவ்வாறு இணைந்துள்ளதோ அதேபோல் சமூக மாற்றமும் பெண்களின் பங்கின்றி சாத்தியமாகாது. சமூகத்தில் நிலவும் சமூக உறவு முறைகளை நிர்ணயிப்பது உற்பத்தி உறவுகளேயாகும் பிற்போக்கு உற்பத்தி முறைகளை உடைத்தெறிவதன் மூலமே, பெண்ணடிமைத்தனத்தைப் பேணி நிற்கும் பிற்போக்கு கலாச்சார மரபுகளைத் துடைத்தெறிய முடியும்.

பெண்களின் இவ் ஒடுக்குமுறைகளை உடைத்தெறிய காலனிய, அடிமை மோக, நிலப்பிரபுத்துவ பிற்போக்கு கலாச்சாரப் பொருளாதார உறவுகளை உடைத்தெறிந்து ஒரு மக்கள் ஜனநாயக சமூக அமைப்பை படைக்க விரும்பும் தேசிய விடுதலை இயக்கத்தின்கீழ் பெண்கள் அணிதிரள்வது அவசியமாகும். இப்புரட்சிகர விடுதலை இயக்கத்தின் வெற்றியே பெண் விடுதலையின் வெற்றியாகும். இதனால் உலகப் பிற்போக்காளரின் ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்துடன் பெண்களின் விடுதலைப் போராட்டமும் இணைந்துள்ளது.

தமிழீழப் பகுதிகளில் வாழும் பெண்கள் தம்மீதான ஒடுக்குமுறைகளை உடைத்தெறிய வேண்டுமாயின் சமூகத்தையும் பிற்போக்கு உற்பத்தி உறவையும் மாற்றியமைக்கப் போராடும் பரந்துபட்ட மக்களின் போராட்டமான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றுவது அவசியமாகின்றது. த. தே. வி. போராட்டத்தின் மூலமே எமது மக்கள் ஆட்சியதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொள்ளவும், அதன் மூலம் சமுதாய வளர்ச்சிக்கு வழிதிறக்கவும் முடியும். இதன் மூலமே பெண்கள் தம் பூரண சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் எய்த முடியும்.

எனவே தமிழ் மக்களின் தேசிய விடுதலை என்ற குறிக்கோளுடன் தமிழ்ப் பெண்கள் தமது ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கு புரட்சிகர பெண்கள் அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன்கீழ் அணிதிரள்வது அவசியமாகின்றது. ஆனால் இன்று தமிழீழப் போராட்டத்தைப் பொறுத்த வரையில் பெண்கள் ஸ்தாபனமாக அணி திரட்டப்படவில்லை. போராட்டம் என்று வரும் ஒருசில பெண்கள் கூட வெறும் வீரசாகசக் கவர்ச்சியிலும், கற்பனைவாதப் போக்குகளிலுமே காணப்படுகின்றனர். இவர்கள் அரசியல் மயப்படுத்தப்படவோ, ஸ்தாபன மயப்படுத்தப்படவோ இல்லை.

தலைவர் மாவோவின் பின்வரும் கூற்று இதைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும். "சமூக நடவடிக்கைககள் இல்லாமல் இருககும போது குடும்பத்தை மாற்றியமைத்தல் என்பதே சாத்தியமில்லை. சமூக வெகுஜன இயக்கங்கள் மூலமாகவே குடும்பத்தை மாற்றியமைத்தல் என்பது சாத்தியமாகும். வெறும் புத்தகங்களில் இருந்தும் செய்தித் தாள்களில் இருந்தும் கற்றதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சமூக நடவடிக்கைகளில் இருந்து தனிமைப்பட்டு செயல்படு வார்களாயின் அக்குடும்பங்கள் தங்களை ஜனநாயகமாக மாற்றியமைத்துக் கொள்ளவே முடியாது."

வெறும் புரட்சிகரக் கொள்கை மட்டும் இருந்தால் போதாது. போர்க்குணமிகக உறுதியான ஸ்தாபனமும் அவசியமாகும். சரியான ஸ்தாபனம் இல்லாவிடின் எதையும் செயல்பூர்வமாக்க முடியாது போய்விடும். எனவே தமிழீழப் பெண்கள் தம்மை உறுதியான ஸ்தாபனமாக்கிக்கொள்வது உடனடிக் கடமையாகும். இதன் மூலமே பெண்கள் தமது ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களை தேசிய விடுதலைப் போராட்டத்துடன் ஒன்றிணைத்துச் செல்ல முடியும்.

போராடிப் பெறுவதே சுதந்திரம். இதற்கு விதிவிலக்காக பெண்களின் விடுதலை இருக்கமுடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசியற் குறிப்புகள்

## 1

### கூட்டணியின் உண்ணாவிரதம் ஏமாற்றுவித்தை

1983 ஜூலை இனக்கலவரத்தின் முதலாவது ஆண்டை நினைவு கூருமுகமாக ஜூலை மாதம் 25ம் தேதி கூட்டணித் தலைவர்கள் வழமை போல் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். வழமைக்கு மாறாக இவ்வுண்ணாவிரதம் இளைஞர்களினால் குழப்பியடிக்கப்பட்டது. 1977 தேர்தலிற்கு முன் இதே வீரமாகாளியம்மன் கோவிலில் திருமதி மங்கையற்கரசி பண்ணிசை பாட சகபாடிகள் புடைசூழ அமிர்தலிங்கம் அவர்கள் சங்கிலி மன்னனின் வாளைத் தூக்கி சுழற்றி வீசி வீர சபதமெடுத்த (துள்ளிக் குதித்த) காட்சி எமக்கு ஞாபகம் வருகிறது. அன்று வீர சபதமெடுத்த அமிர்தலிங்கத்திற்கோ இந்தக்கதி என்று நாம் ஆச்சரியப்படுகின்றோம். அன்று சிறுவர்களாக நின்று வேடிக்கை பார்த்து வாள் வீச்சைக் கண்டு பிரமித்துக் கைதட்டிய அதே இளைஞர்கள் தான் இவர்களது உண்ணாவிரதத்தை குழப்பியவர்கள் என்பது மேலும் ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். வீரசபதம் எடுத்த சிறிது காலத்திலேயே எதிர்கட்சித் தலைவரானவுடன் யாவும் மறந்து பாராளுமன்றத்தில் குறுகிப்போய் பின் இளைஞர்களின் நெருக்கடியால் பாராளுமன்றத்தை விட்டு வெளியே வந்து நிற்க இடமின்றி அலைந்து திரிபவர்களையிட்டு நாம் அதிகம் அக்கறைப்படாவிடினும் நடந்த இச்சம்பவத்தையிட்டு அக்கறைப் படாமலும் இருக்க முடியாது.

25ம் திகதி காலை கூட்டணித் தலைவர்கள். உண்ணாவிரதத்தை ஆரம்பித்து சிறிது நேரத்திலே இளைஞர்கள் போய் கேலி செய்து கூச்சலிட்டுள்ளார்கள். பின் தலைவர்களிடம் கேள்விக் கணைகளைத் தொடுத்து வாக்கு வாதப்பட்டதுமாத்திரமில்லாமல் சாப்பாட்டுப் பார்சலைக் கொடுத்து சாப்பிடும்படி வற்புறுத்தினார்கள். இறுதியாக அமிர் அவர்களை இளைஞர்கள் தூக்கிச் செல்ல முயற்சித்தால் உண்ணாவிரதம் குழம்பியது இவ்வளவு சம்பவங்களும் நடைபெறும் வரைக்கும் பாதுகாப்புப்படையினர் ஏன் வரவில்லையென்று நாம் சிந்திக்க வேண்டும் தமிழ் மக்களிடையேயுள்ள இயக்கங்களிடையே மோதலும் குழப்பமும் வருவதை அரசு விரும்புவது மாத்திரமல்லாமல் மோதலையும் பிளவையும் உருவாக்க பல வழிகளிலும் முயல்கிறது என்பதை அத்துலத் முதலியே பகிரங்கமாக சொல்லி உள்ளார். வெறும் வாய் வீச்சாலும் வெற்று ஒப்பாரிகளாலும் மக்களை ஏமாற்றி தமிழ் மக்களின் போராட்டத்தை உண்ணாவிரதம், உயர்மட்டப் பேச்சு வார்த்தைகளுக்குள் குறுக்கி துரோகமிழைத்ததை தமிழ் மக்கள் இனம் கண்டு கொள்ளவேண்டும். மக்களிடம் இவர்களின் போலித்தன்மையையும், கையாலாகாத்தனத்தையும் அம்பலப்படுத்துவது அவசியமானது. ஏற்கனவே ஓரளவு அம்பலப் பட்டுவிட்ட இவர்கள் முழுமையாக இன்னும் அம்பலமாகவில்லை.

கடந்த வருட சம்பவத்தின் ஒரு வருட பூர்த்தியை நினைவு கூருமுகமாக பலரதும் வேண்டுகோளால் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது போலவே இவர்களும் தம்மளவில் அரசுக்கு எதிர்ப்பை தெரிவித்துவிட்டு போகட்டும் என விட்டுவிடலாம். அதே நேரத்தில் இவர்களது இத்தகைய பயனற்ற வழிகளை, போராட்டத்தை திசை திருப்பும் தன்மைகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி, மக்களுக்கு விளங்கப்படுத்தி. ஏற்க வைப்பதன் மூலமே மக்களை நாம் கருத்து ரீதியாக தெளிவு படுத்தவும் சரியான வழியில் அணி திரட்டவும் முடியும். மக்களை ஆயுதப் போராட்டத்திலிருந்தும், சரியான வழி காட்டலிலிருந்தும் திசை திருப்பும் இவர்களது, நோக்கத்தை, மக்களுக்கு புரிய வைப்பதை விடுத்து பலாத்காரமாக அவர்களது போராட்

www.tamilarangam.net



டத்தை முறியடிப்பது எதுவித பலனையும் தராது. அது தவறானதும்கூட. அது அவர்களை அம்பலப்படுத்த உதவாததுடன், அராஜகத்தை வளர்ப்பதாகி விடும். கடந்தகாலங்களில் கூட்டணியினரும், தமக்கு எதிரானவர்களை அழிப்பதில் அராஜகத்தைக் கையாண்டதை மறந்துவிட முடியாது. நாம் மக்கள் சக்தி மீது நம்பிக்கை கொண்டவர்கள் குறுகிய சிந்தனையில் சுலபமான வழியை நாடாமல் சரியான வழியில் மக்களை அணிதிரட்டுவதன் மூலமே எமது இலக்கை அடைய முடியும்.

## 2

## முஸ்லிம் மக்கள்மீது அரச காடைத்தனம் !

இலங்கையில் பிரிட்டிசார் ஆண்ட காலத்திலிருந்தே சிங்கள பெருமினவாதப் போக்கானது, முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல்கள், காடைத்தனங்கள் நிகழ்த்தி வந்ததை காண முடியும். இலங்கை அரசுகளால் ''தேசிய வீரராக'' போற்றப்படும் அநாகரீக தர்மபால போன்றோரே, முஸ்லிங்களுக்கெதிரான பிரச்சாரத்தை முன்னெடுத்து முஸ்லிம் விரோதத்தை வளர்த்தனர். இதன் விளைவே 1915 சிங்கள-முஸ்லிம் கலவரம். அன்று பல முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன் பல நூற்றுக்கணக்கான வர்த்தக நிலையங்கள் எரிக்கப்பட்டன. இதனை சுயநலமிக்க முஸ்லிம் தலைவர்கள் மறக்கலாம். ஆனால் வரலாற்றை மறக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது.

இவ்வரசானது, சிங்கள பெருமினவாதத்தில் வேரூன்றியுள்ளதும், அனைத்து சிறுபான்மை இனங்களின் மீதான ஒடுக்குமுறை மீது தனது இருப்பைக் கொண்டுள்ளதும் ஆகும். இந்த பெருமினவாத வளர்ச்சியினூடாகவே அரசினால் சிங்கள ஒடுக்கப்படும் மக்களை தனக்கெதிராக அணிதிரளாது தடுத்து வைக்க முடிகிறது அதே போலவே பல்வேறு வழிகளையும் கையாண்டு தனது ஒடுக்கு முறையின் கீழுள்ள எல்லா சிறுபான்மை இனங்களையும் கூட ஒரே அணியில் ஒன்றிணைய விடாது தடுக்க தந்திரமான வழிகளை கையாளுகிறது. சிறுபான்மை இனங்களுக்கிடையிலுள்ள பிளவுகளை வளர்த்து விடுவதன் மூலமும், பிற சலுகைகள் மூலமும் அவற்றை பிரித்தாளும் வழியைக் கடைப்பிடிக்க சிங்கள அரசு முனைகிறது.

எனினும் கூட இன்று, ஜே. ஆரால் தனது ஒடுக்கு முறைக்கொள்கை நிறைந்த விகார முகத்தை வெளித் தெரியும்படி காட்டிக் கொள்வதைத் தவிர்க்க முடியவில்லை. தொடர்ந்து முஸ்லிம் விரோத நடவடிக்கைகள் அரசுகளினால் மேற்கொள்ளப்பட்டே வந்துள்ளன. கல்லோயாக் குடியேற்றத்திட்டத்துடன் பல முஸ்லிம் விவசாயிகளின் நிலங்கள் பறிக்கப்பட்டன. பின்ன அல்லை, கந்தளாய், பகுதியிலும், அதே கதி தான், முஸ்லிம் மக்களின் நிலங்களிற்கு ஏற்பட்டது. கடந்த அரசாங்கத்தின் ஒடுக்கு முறைக்கெடுத்துக்காட்டாக, புத்தளம் பள்ளி வாசலிலேயே ஏழு முஸ்லிமகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தச்சம்பவத்தைக் காட்டி ஆதரவு பெற்றே இன்றைய அரசு பதவிக்கு வந்தது. பதவிக்கு வந்த சில காலத்திலேயே, யூ. என். பி. அரசானது தனது பங்கிற்கு கொம்பனித் தெரு பள்ளிவாசலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து சிலரைக் கொன்றதுடன், பலரைக் காயப்படுத்தியது. இன்று சேருவில புதிய நகரத் திட்டம் கொண்டு வந்ததன் மூலம் தோப்பூர் பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களின் நிலங்கள் பறிபோகும் நிலையும் உள்ளது. ''தீகவாபி'' புனித நகரத் திட்டம் மூலம் முஸ்லிம்களின் பல நூற்றுக்கணக்கான சிறந்த விளை நிலங்கள் பறிபோயின. 1982 இல் காலியில் நடந்த இனக்கலவரத்தில் பல முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன் அச்சம்பவங்கள் மூடி மறைக்கப்பட்டன.

அரசின் ஒடுக்கு முறைகளுக்கெதிராக மக்களின் விடுதலை உணர்வுகள் வளர்ந்து வருகின்றன. தேசிய இனங்கள் விடுதலையை வேண்டி நிற்கும் இக்கால கட்டத்தில் தமிழ் தேசிய இனமும், தனது தேசிய விடுதலையான தமிழீழ விடுதலைப் போரை, முன்னெடுத்து

www.tamilarangam.net



நிற்கிறது. மலையக மக்களிடமும் முஸ்லிம் மக்களிடமும் கூட அரச எதிர்ப்புணர்வும் போராட்டங்களும் வளர்ந்து வருகின்றன. அரசும் அடுத்து வரும் மக்களது சுதந்திரப் போராட்டத்தையும், சுதந்திர உணர்வையும் நசுக்குவதற்காக சர்வதேச பிற்போக்கு சக்திகளுடன் மேலும், மேலும் தன்னை இணைத்துக் கொள்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையான ஜே. ஆர். இன் அரசு, அமெரிக்கக் கையாளும் சர்வதேச பயங்கரவாதியுமான இஸ்ரேலை அழைத்து வந்து தனது அரச பயங்கரவாதத்தை சிறந்த தேர்ச்சியுடையதாக பயிற்றி உயர்த்த முயன்று வருகிறது.

கடந்த அரசாங்கத்தால் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட இஸ்ரேலிய இராஜதந்திரிகள் மீண்டும் இங்கு குடிகொண்டுள்ளனர். இராஜதந்திரிகள் மாத்திரமல்ல அவர்களுடன் சேர்ந்து "மொசாட்" உளவுப் படையினரும் உள்ளே நுழைந்துள்ளனர். இது முஸ்லிம்கள் மத்தியில் பரவலான அதிருப்தியை வளர்த்தது. புத்தளத்திலும், யாழ் பல்கலைக்கழகத்திலும் முதலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஆனால் அரசு திட்டமிட்டபடியே இஸ்ரேலுடனை தொடர்பை மேற்கொண்டது. அரசில் வெளியுறவு மந்திரியாவுகம், போக்குவரத்து மந்திரியாகவும் முஸ்லிம்கள் இருந்தும்கூட அரசு முஸ்லிம்களின் எதிர்ப்புக் குரலுக்கு செவிசாய்க்கவில்லை.

பாலஸ்தீன மக்களை படுகொலை செய்து முழு அரபு உலகுக்குமே அச்சுறுத்தலாக இருக்குப் இஸ்ரேல் அரசானது, முஸ்லிம் மக்களிற்கு மட்டுமன்றி முழு உலகுக்கும், உலக விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரான பயங்கர வாதியாகும்.

இஸ்ரேலிய கொமாண்டோக்கள் வருகைக்கு எதிர்ப்பு தெரிவுக்குமுகமாக காத்தான் குடியில் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஊர்வலங்கள், ஆயுதப்படையினரால் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டு முறியடிக்கப்பட்டதுடன், துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டு பலர் படுகாயப்படுத்தப்பட்டனர். செய்தித் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டதால் அதற்கு முன்பே, இஸ்ரேலிய வருகைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், செய்திகள், கட்டுரைகள் யாவும் தடை செய்யப்பட்டன. இத்தனையும் நடந்திருந்தும் உதைத்த காலை நக்கும் முஸ்லிம் தலைவர்கள் அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கின்றனர், எனினும் முஸ்லிம் மக்கள் முன்பு போலல்லாது தமது தலைமைகளிலிருந்து விடுபட்டு பல பகுதிகளிலும் தம் எதிர்ப்பை பல வடிவங்களிலும் வெளிப்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் அவர்களது போராட்டங்கள் நெறிப்படுத்தப்படவோ, தொடர்ந்து முன்னெடுக்கப்படவோ இல்லை.

இவ்வளவு எதிர்ப்புகள் கிளம்பிய போதும், ஜே. ஆர். இது பற்றிப் பேசுகையில் "சிங்கள மக்களுக்கு நன்மை செய்ய முடியாது போனால் நான் ஜனாதிபதியாக இருப்பதில் பலனேதும் இல்லை. நான் எந்த சக்திகள் தடுத்தாலும் இஸ்ரேலிய நலன் பேணும் பிரிவை இங்கு கொண்டு வந்தே தீருவேன். சில முஸ்லிம் குழுக்கள் தமது அர்த்தமற்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலமாக சிங்கள மக்களை ஆத்திரமூட்டி மீண்டுமொரு யூலைக் கலவரத்தை உருவாக்க எத்தனிக்கிறார்கள். இதனை அனுமதிக்க முடியாது. மீண்டுமொரு கலவரம் வருவதை விரும்பாவிட்டால், முஸ்லிம்களை அமைதியாக இருக்குமாறு எச்சரிக்கிறேன்" என்று அறிவித்தார். இந்த அச்சுறுத்தலோடு உடன் நிகழ்வாக கிழக்கு மகாணத்தில் முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல்கள், கடைகள் உடைப்பு என்பன நடைபெற்றன.

முஸ்லிம் மக்கள் இதுவரை காலமும் அரசு பற்றி கொண்டிருந்த பிரமைகள் உடைந்து வருகின்றன. அரசின் அச்சுறுத்தலும் அடக்குமுறை நடவடிக்கைகளும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பற்ற நிலையை துலாம்பரமாக வெளிக்காட்டின. எழுந்து வரும் தமிழீழப் போராட்டத்துடன் முஸ்லிம் மக்களை இணைந்துக் கொள்ளாது தடுப்பதற்காகவே அச்சுறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

www.tamilarangam.net



பாலஸ்தீனரை அழிப்பதில் பயிற்சி பெற்ற இஸ்ரேலிய கொமாண்டோக்களின் ஆலோசனையுடனேயே தமிழ் மக்களின் வீடுகள் அழிக்கப்பட்டன. மன்னாரில் முஸ்லிம் மக்களின் வீடுகள், கடைகள் அழிக்கப்பட்டன. படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன. இன்று மந்திரி முகம்மதுவும், அத்துலத் முதலியும் கண்துடைப்பாக பாதிக்கப்பட்ட மன்னார் முஸ்லிம்களுக்கு நஷ்டஈடு தருவதாகவும், விசாரணை நடத்துவதாகவும் 'பசப்பு' மொழிகளை பகர்கின்றனர் இவர்களது நஷ்டஈடும் விசாரணை உத்தரவாதங்களும் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வை திசை திருப்பவும், எதிர்ப்பை மழுங்கடிக்கவும் கூறப்படும் பசப்பு மொழிகளேயாகும். கடந்த காலங்களில் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டு தமிழ் மக்களது எதிர்ப்புணர்வுகளைத் திசை திருப்புவதற்கு விசாரணை, நஷ்டஈடு, போன்ற ஏமாற்று வார்த்தைகள் கூறப்பட்டு வந்தன. ஆனால் தமிழ் மக்கள் இத்தகைய ஏமாற்று வார்த்தைகளை உணர்ந்து போராட்டத்தை முன்னெடுப்பது தவிர்க்க முடியாததாகியது. அன்று தமிழ் மக்களுக்குச் சொல்லப்பட்ட ஏமாற்று வித்தைகள் இன்று முஸ்லிம் மக்களிற்குச் சொல்லப்படுகின்றன. சூரியனைச் சுளகினால் மூடிவிட முடியாது. உதைத்த காலை நக்கும் தலைவர்களை நிராகரித்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்வதன் மூலமே முஸ்லிம் மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், விடுதலையைப் பெறவும் முடியும் என்பதை உணரும் போக்கு தொடங்கி விட்டது. முஸ்லிம் மக்கள் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உறுதியான சக்தியாக வளரும் நாள் வெகுதூரத்திலில்லை.

○ நமது கொள்கை காத்திருக்க வேண்டிய அடிப்படை யாது? அது நமது சொந்தப் பலத்தைச் சார்ந்திருக்க வேண்டும் அதன் அர்த்தம், ஒருவர் தமது சொந்த முயற்சிகள் மூலம் புது வாழ்வு பெறுவதாகும். நாம் தனிமைப்பட்டு நிற்கவில்லை. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எல்லா உலக நாட்டு மக்களும் நமது நண்பர்கள். இருந்தும் நமது சுய முயற்சிகள் மூலம் புது வாழ்வு பெறுவதை நாம் வலியுறுத்துகின்றோம். நாம் சுயமாக அணிதிரட்டும் சக்திகளைச் சார்ந்து உள்நாட்டு, வெளிநாட்டு பிற்போக்குவாதிகளனைவரையும் நம்மால் தோற்கடிக்க முடியும்.

நாம் சுய—சார்புக்காக நிற்கிறோம். நாம் அன்னிய உதவியை எதிர் பார்க்கிறோம். ஆனால் அததச் சார்ந்திருக்க முடியாது நமது சொந்த முயற்சிகளை, முழு இராணுவத்தினதும், மக்கள் அனைவரினதும் சிருஷ்டி ஆற்றலைச் சார்ந்திருக்கிறோம்.

## 3

## "மொசாட்" இன் பிடியில் தமிழீழம்

அண்மையில் தமிழீழம் மீண்டும் மயானமாகியது. வல்வெட்டித் துறையில் கடற்படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து யாழ்குடாநாடு யுத்தகளமாகியது. கவச வாகனங்களின் இரைச்சலும், இயந்திரத் துப்பாக்கிகளின் வெடிச்சத்தமும் மாத்திரம் எங்கும் கேட்டன. மக்கள் மரண பீதியில் வீடுகளிற்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். கடற்படையினரும், இராணுவத்தினரும், கூட்டாக தாக்குதலிலீடுபட்டனர். கடற்படையின் மீது தாக்குதல் தொடுத்த மறுநாள் மீண்டும் வல்வெட்டித்துறையில் போலிஸ்அதிரடிபடை மீதுதாக்குதல் தொடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்தே காவல் படையினர் பலத்த தாக்குதலை நடத்திபெருமளவிலான சேதத்தை விளைவித்தனர். பல வீடுகள் நாசமாயின. குடும்பங்கள் பல வீடு இழந்து அகதிகளாயினர். நூற்றுக்கணக்கான சிறுவர்கள், இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இதனைத்

www.tamilarangam.net



தொடர்ந்து சுன்னுகம், ஊர்காவற்றுறை ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையங்கள் தாக்குதலிற்குள்ளாயின. தீவிரவாதிகள், தாக்குதலின் போது கொல்லப்பட்டதாக அரசு அறிவித்தாலும் உண்மையில் அப்பாவி பொதுமக்களே இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பூநகரி-மன்னூர் ரோட்டில் ராணுவ வாகனம் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அடம்பன் கிராமமே இராணுவத்தினரால் கொழுத்தப்பட்டது. பின் மன்னூர் நகரம் தீ மூட்டப்பட்டது. 3000 குடும்பங்கள் அகதிகளாயினர் மன்னூர் நகரமே மயானம் போல் காட்சியளித்தது. இதுவரை காலமும் பாதிக்கப்படாத மன்னூர் பாதிப்புக்குள்ளானவுடன் மன்னூர் மக்களை மற்றைய பகுதி தமிழ் மக்களிடமிருந்து பிரிக்கும் நோக்குடன் நீதி விசாரணை நடக்குமெனவும் இந்நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாகவும், பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்குவதாகவும் பாதுகாப்பு மந்திரி லலித்அத்துலத் முதலி பசப்பி உள்ளார். மந்திரிமுகமட், அத்துலத்முதலி ஆகியோரடங்கிய விசாரணைக்குழு மன்னூர்சென்றது. இஸ்ரேலிய உளவுநிறுவனம் மொசாட்டினதும், அத்துலத்முதலியினதும் ஆலோசனையிலேயே இந் நடவடிக்கைகள் நடந்தன என்பதை உலகமறியும். உலக மக்களின் கண்ணை கட்டிவிட முடியாது.

இம்முறைச் சம்பவத்தில் பொது மக்களுக்கு பாரிய இழப்புகள் எற்பட்டன. சுன்னுகம் பொலிஸ் நிலையத் தாக்குதல் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கூண்டில் கைதிகளை அடைத்தபின்னர் அங்கு கைக்குண்டை வைத்துவிட்டுபொலிசார்வெளியேறினர். கைதிகளை விடுவிக்க விடுதலைப் போராளிகள் முற்பட்டபோது குண்டு வெடித்ததால் கைதிகள், விடுதலைப்போராளிகள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர். இந்நெருக்கடி நாட்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். வல்வெட்டித் துறையில் மட்டும் 300 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர். கடந்த காலத்தாக்குதல்களிலிருந்து இம்முறைத் தாக்குதல் சில வேறுபாடான தன்மைகளைக் கொண்டிருந்தது. கடந்த காலத் தாக்குதல்களைப் போலல்லாது இம்முறை எதிரி மீது தொடர்ந்து எதிர்த்தாக்குதல் தொடுக்கப்பட்டது. நல்ல அறிகுறியான இது வரவேற்கப்படவேண்டியதொன்றே. ஆனாலும் பரவலாக மக்கள் ஆயுதபாணியாக்கப்பட்டு பரவலாக தாக்குதல்கள் தொடுக்கப்பட்டாலே எதிரிக்கு அழிவைக் கொடுக்க முடியும். அப்படியில்லாத பட்சத்தில் பொதுமக்கள் தேவையற்ற பாரிய அழிவை எதிர் நோக்க வேண்டிவரும், என்பதை இச்சம்பவம் வெளிப்படுத்தியுள்ளது. தாக்குதலைத் தொடுத்தவர்கள், இவ்வநுபவத்திலிருந்து இதனைத் கற்றுக் கொள்ளுதல் அவசியமானது. ஏற்கனவே நாம், ''இலக்கு'' முதலாவது இதழில் கொரில்லாப் போராட்டம் பற்றி தெளிவாக முன் வைத்துள்ளோம். மக்கள் பரவலாக அரசியல் மயப்படுத்தப்பட்டு, ஸ்தாபனமயப்படுத்தப்பட்டு,மையப்படுத்தப்பட்டஸ்தாபன வழிகாட்டல் இருக்கும் போதே கொரில்லாப் போராட்டம் வெற்றிக்குச் செல்லும். தொடர்ச்சியான, பரவலான எதிர்தாக்குதலிற்கான ஸ்தலக் கொரில்லாக்கள் பரவலாக கட்டப்பட்டாலே எதிரியின் அழித்தொழிப்பிலிருந்துமக்களைபாதுகாக்கமுடியும். இதுவரைக்கும் நடந்தசம்பவங்களை எடுத்துக் கொண்டால் எதிரிக்கு கிடைத்த அழிவைவிட பொது மக்களுக்கே பாரியஅழிவு ஏற்பட்டது. நகர்ப்புறக் கொரில்லா நடவடிக்கை எமது போராட்டத்தில் அத்தியாவசியமான ஒரு போராட்ட வடிவம். கொரில்லாப் போராட்டம் மக்கள் போராட்டத்தின் ஒரு பகுதி என்பதை, சிலர் தவருக கொரில்லாப் போராட்டமே முழுமையான மக்கள் போராட்டம் என முன் வைக்கின்றனர். இது சுத்த இராணுவ வாதத்தின் வெளிப்பாடேயன்றி வேறல்ல. சுத்த இராணுவப் பாதையை நிராகரித்து நீண்டகாலக் கண்ணேட்டத்துடன் கூடிய மக்கள் யுத்தப் பாதையில் போராட்டத்தை முன்னெடுப்பதே நாம் செய்ய வேண்டிய பணியாகும். ●

www.tamilarangam.net



# ● ● இயக்கங்களிடையே ஐக்கிய முன்னணியின் அவசியம்

எம் மத்தியிலுள்ள இயக்கங்கள் ஐக்கிய முன்னணி அமைப்பது பற்றி ஆவல் கொண்டிருந்தாலும் அதை எப்படி உருவாக்குவது, எப்படிவளர்த்துக்கொண்டுசெல்வது என்பதில் சரியான அணுகுமுறைஇல்லாததினுல் கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகள் கருவிலேயே சிதைந்து போயின. மக்களின் விருப்பமும், தேவையும்கூட ஐக்கிய முன்னணியாகவே உள்ளது. குழுக்களிறகிடையேயான போட்டிகள், இழுபறிகள் என்பன விடுதலைப் போராட்டத்திற்கு அழிவையே கொடுத்துள்ளன. பொதுவான குறிக்கோளை மையமாக வைத்து குறைந்த பட்ச பொதுவேலை திட்டத்தில் ஐக்கிய முன்னணி அமைப்பதில் பின் நிற்கின்றன. ஆனுல் எல்லா இயக்கங்களும் தாங்கள் தொழிலாளர், விவசாயிகள், மாணவர், புத்தி ஜீவிகள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரை ஒன்று திரட்டி, என்பதோடு மட்டும் நிறுத்தாமல் சிங்கள முற்போக்கு சக்திகளையும் போராட்டத்திற்கு ஆதரவாக திரட்ட வேண்டுமென்றும் அறிக்கை விட்டுத் தம்பட்டமடிக்கின்றன. பல்வேறு சமூக சக்திகளையும் ஐக்கியப்படுத்தும் இவ்வியக்கங்கள் ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்க பின் நிற்பதுடன் அதற்கு வெவ்வேறு காரணங்களையும் கூறி நிற்கிறுர்கள்.

ஆரம்பத்திலிருந்து ஐக்கிய முன்னணிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம். முதலாவது கூட்டமைப்புக் கூட்டம் அருளர் தலைமையில் அழைப்புவிடப்பட்டு 1982-ம் ஆண்டு ஆகஸ்டில் கூட்டப் பட்டது. இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் (L. T. T. E.). தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (P.L.O.T.) ஈழப் புரட்சியாளர் அமைப்பு (E.R.O.S.) ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E.P.R.L.F.), தமிழீழ விடுதலை இயக்கம் (T.E.L.O.) தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி மற்றும் தனிநபர்களிற்கும் (T E.L.A. தேவன் உட்பட) அழைப்பு விடப்பட்டது. தமிழீழவிடுதலைப்புலிகள்தவிர ஏனைய அமைப்புகள பங்கு பற்றின. த.வி.ஈ. புலிகளிடமிருந்து ஓர் அறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. அதில ''நாம் ஐக்கிய முன்னணியை மனப்பூர்வமாக வரவேற்கின்ருேம். ஆனுல் இதுல அவசரப்பட்டு எங்களால் பங்கு பற்ற முடியாது. ஏனென்றுல் எங்களுக்கு முன ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் எம்மை பின் நிற்கச் செய்கின்றன, மிகுதி இயக்கங்கள் ஓர் ஐக்கிய முன்னணியாக, பொது வேலைத் திட்டத்தில் இணைந்து இயங்கத் தொடங்கட்டும், அதில் திருப்தி ஏற்பட்டால் நாமும ஐக்கிய முன்னணிக்கு வரத் தயங்க மாட்டோம்'' என்று அவ்வறிக்கையில் கூறப்பட்டிருந்தது. சரி, முன் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் பின் நிற்கச் செய்கின்றன எனக் கூறும் இவாகள் தாங்கள் எடுக்கும் போராட்ட நடவடிக்கை ஒன்று தோல்வியாக முடிந்துவிட்டால் ''எமக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம் எம்மை போராட்டத்தில் ஈடுபடாமல் பின் நிற்கச் செய்கிறது'' என்று கூறுவார்களா? மாருக அனுபவங்களிலிருந்து படிப்பினை பெற்று திரும்பவும் புதிய உத்திகளை கையாண்டு போராடுகிறுர்கள். களத்தை விட்டு ஓடிவிடவில்லை. இவ்வடிப்படையில் பார்த்து, ஐக்கிய முன்னணி பற்றி வரும் போது முன் அனுபவத்தைச் சொல்லி பின் நிற்பது தவறுனது. அனுபவங்கள் கசப்பாகவும் முடியலாம், களிப்பாகவும் முடியலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திரும்பத் திரும்ப முயற்சிக்கவேண்டும். அதை விட்டு ஒரேயடியாக புறக்கணிப்பதென்பது தவறானது. இன்றைய நிலையில் முன்னணிப் பாத்திரம் வகிக்கும் மக்களுக்காகப் போராடுகிறோம் என்று கூறும் விடுதலைப் புலிகள், மக்கள் நல்லெண்ணக் கருத்திற் கொண்டு ஐக்கிய முன்னணியின் அவசியம் பற்றி உணர்ந்து மக்களை இன அழித்தொழிப்பிலிருந்து பாதுகாக்க, அதை உருவாக்க முன்வர வேண்டும்.

முதலாவது ஐக்கிய முன்னணிக்கான முயற்சியில் P.L.O.T., E.R.O.S. E.P.R.L.F., T.E.L.O., தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி மற்றும் தனி நபர்கள் கலந்து கொண்டாலும் இதில் வந்த பெரும்பான்மையோர் பார்வையாளர்களாக இருந்தார்களே யன்றி ஒரு ஐக்கிய முன்னணியைக் உருவாக்க பெரும் அக்கறை காட்டவில்லை. ஐக்கிய முன்னணியைக் கட்டவேண்டும் என்று கூறிக்கொண்ட அருளரும், P.L.O.T., உம் ஒருவரை ஒருவர் பயன் படுத்தி விட்டதாக குற்றம் சாட்டினர். இதில் வேடிக்கை என்னவெனில் ஒவ்வோர் இயக்கமும் தமது நோக்கங்கள், திட்டங்களுக்கு எப்படி பிற இயக்கங்களைப் பயன்படுத்திக் கொள்வது என்ற வழியிலேயே சிந்தித்து செயற்பட்டன. இயக்கங்களிடையே இணைப்புக்காக பாடுபட்டவர்கள் கூட இயக்கங்களின் ஒற்றுமை வேற்றுமை மாறுபாடுகளைக் கணக்கிட்டு எந்தெந்த அளவில் இவற்றினிடையே ஒற்றுமையைச் சாதிக்கலாம் எனவோ, எந்தளவு திட்டத்தைக் கூட்டாக இவை மேற்கொள்ள இயலுமாயிருக்கும் என்பதையோ கணித்து ஒரு திட்டத்தைச் சமர்ப்பிக்கவில்லை. பதிலாக இந்த இயக்கங்களை ஐக்கிய முன்னணியாக்கி அப்பணியை செய்த பெருமையை 'தாம் அடையும் விருப்பத்திலிருந்தே முயற்சிகளை ஆரம்பித்தார்கள். விடுதலையின் தேவையை உணர்ந்து அதற்குத் திட்டத்தை வகுத்து அதனை நிறைவேற்றும் படிப்படியான ஒருங்கிணைந்த, பணிகளில் ஈடுபடவில்லை. உதாரணமாக அருளர் சுய விளம்பரம் காரணமாக தானே ஐக்கிய முன்னணியை உருவாக்கியவர் என்று வெளியுலகுக்குக் காட்ட அறிக்கை விட்டு தானும் குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டும் வகையறுக்களைச் சேர்ந்தவர்தான் எனக்காட்டிக் கொண்டார். P.L.O.T.ம் தன் பாட்டில் மற்றைய இயக்கங்களின் ஒப்புதலின்றி தேர்தலில் ஈடுபடப் போவதாக அறிக்கை விடவும், இந்த ஒற்றுமை முயற்சியில் குழப்பம் ஏற்பட்டது. அருளரின் தன்னிச்சையான முடிவுகளும் குழப்பத்தை ஏற்படுத்தின. உதாரணமாக 1982 அக்டோபரில் ஐக்கிய முன்னணி அமைப்பாளர் ஒவ்வோர் இயக்கத்துக்கும் கமிட்டியை உருவாக்கி பணிகளைப் பிரித்து இராணுவத்துக்குப் பிரபாகரனையும் அரசியலுக்கு முகுந்தனையும் பொருளாதாரம் கல்வி, இளைஞர் துறை போன்றவற்றுக்கு T.E.L.O., E,R.O.S., E.P.R.L.F. ஐயும் நியமிப்பது' என்று முடிவெடுத்து செயற்பட்டார்.

ஒவ்வோர் இயக்கமும் தனித்தனியான கொள்கை வழிகளைக் கொண்டிருப்பதாலும் அந்த வழிகளிலேயே விடுதலைப் பாதையை முன்னெடுக்க முனைவதாலும் தமது திட்டப்படியே தனித்தனி இயக்கங்களாயுள்ளன. பொது எதிரிக்கெதிரான அனைத்து சக்திகளையும் சாத்தியமான அளவு உடன்பாடு, கூட்டுச் செயற்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கே ஐக்கிய முன்னணியை தமது இணைப்பின் மூலம் உருவாக்குகின்றன. அவை ஒரு குறைந்த பட்ச பொது வேலைத் திட்டத்தை நிறைவேற்ற ஓர் ஐக்கிய முன்னணியை அமைக்க முடியுமே ஒழிய ஓரே இயக்கமாக ஐக்கியமாகிவிட முடியாது. ஒரு கொள்கை வழி இல்லாத நபர்களினாலேயே அப்படியான ஐக்கியத்தை கனவு காண முடியும். இந்த வகை உணர்வு இன்றும் பல குழுக்களிடையே கூட நிலவுகிறது. அவர்கள் பிறரது அரசியல் வழிபற்றி உணராது—உணரவிரும்பாது—தம் கீழ்வா அழைப்பு விடுகின்றனர். தத்தம் வழியைச் செயல்படுத்த ஒவ்வோர் அமைப்பும் ஆயுதப்படை உள்ளிட்ட அனைத்து முயற்சிகளையும் சிரத்தையுடன் முன்னெப்பது இயல்பான தொன்றென உணர மறுக்கின்றனர்.

P.L.O.T. இன் மனதில் தமிழீழ மக்களது தலைமையை எடுத்துக் கொள்வதென்ற உத்

www.tamilarangam.net



தேசம் ஏனைய இயக்கங்களைப்போலவே இருந்தது. அது எவ்விதத்திலும் தவறல்ல. அது ஒவ்வோர் அமைப்பினதுஇருப்பிற்கே அர்த்தம் தரும் குறிக்கோள் ஆகும். ஆனால் அவர்கள் தமது குறிக்கோளை செயற்படுத்த, ஐக்கிய முன்னணியை பயன்படுத்த முனைந்தது வேதனைக்குரியதாகும். அனைத்து அமைப்புகளையும் என்ன திட்டத்தின்கீழ் எந்தளவிற்கு செயற்பட செய்வது எனச் சிந்தியாது தமது இலக்கிற்கு பயன்படுத்தும் நோக்கில் செயல்பட்டார்கள். இவர்கள் தங்கள் விருப்பப்படி பத்திரிகைக்கு விட்ட அறிக்கை பிரச்சினையைத் தோற்றுவித்தது.

ஓர் ஐக்கிய முன்னணி முயற்சிகளை ஆரம்பிக்கும் போதும், செயற்படுத்தும் போதும், சிறிய அமைப்பாயினும் சரி, ஊசலாடும் அமைப்பாயினும் சரி, கூட்டாக அமர்ந்து, சரி சமமாக உட்கார்ந்து விடயங்களை விவாதித்து ஏற்படும் உடன்பாட்டின் அடிப்படையிலே நடவடிக்கைகளை மேற்கொள்ளல்வேண்டும் என்ற கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும். அதை விடுத்து ஏனையோரின் கருத்துக்களை அறியாது, மதியாது தமது திட்டத்தை தன்னிச்சையாக பிறர் மீது திணிக்க முயல்வது ஐக்கிய முன்னணி முயற்சிக்கு முடிவாக அமையும். ஆம் அப்படித்தான் அமைந்தது. 1982 ல் E. P. R. L. F., P.L.O,T., தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி, தமிழீழவிடுதலைஅணி மற்றும் சிலவெகுஜன ஸ்தாபனங்களும் இணைந்து வெகுஜனப் போராட்டங்களில் ஈடுபட்டன. இதிலும்கூட இயக்கங்களின் மொத்த நலன்களிலும் பார்க்க சில இயக்கங்களின் குழு நலன்களே முன்னின்றமையால் மேலும் வளராமல் சிதைவுற்றுப் போனது. இது போலவே அண்மையிலும் புத்தூர் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலப் பிரச்சனைக்காக தமிழ்ழ விடுதலைப்புலிகள் உட்பட சகல இயக்கங்களும் கூட்டு நடவடிக்கைக்காக ஒன்று கூடின. ஆனாலும் இதுவும் முன்போல சில இயக்கங்களின் தவறான கையாள்கையால் நிலப்பிரச்சனை தீர்க்கப் படாதது மாத்திரமல்ல கூட்டும் உடைந்து போயிற்று.

மீண்டும் 1983 ம் ஆண்டு ஜூலைக் கலவரத்தைத் தொடர்ந்து E.R.O.S., E.P.R.L.F., T.E.L.O., P.L.O.T., என்பன பேச்சு வார்த்தை ஒன்றைத் தொடங்கின. ஆனால் இவர்கள் ஒரு செயல் பாட்டையும் செய்யக் கூட முடியவில்லை. ஒபரோய் தேவன் கூட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இதற்கு அஞ்சலி செலுத்துவதற்குக்கூட ஒன்றுபட இவர்களால்முடியவில்லை, என்பதிலிருந்துகூட்டின் தன்மையை உணரக் கூடியதாய் உள்ளது. பின்னர் தமிழீழ தகவல் நிலையத்தால் கூட்டப்பட்ட ஐக்கிய முன்னணிக்கான முயற்சியிலும் E.R O.S., E.P.R.L.F., P.L O.T.,T.E.L.O., T.E.L.A., N.L.F.T. என்பனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கலந்து கொண்டன. பின் கூட்டணி தவிர்ந்த இயக்கங்கள் கூடிப் பேசின. மட்டக்களப்புச் சிறையுடைப்புச் சம்பவத்தை அடுத்து E.P.R.L.F, P.L.O.T. இடையே ஏற்பட்ட உரிமைப் போட்டி கீழ் அணிகளிடையே மோதலைத் தோற்றுவித்தது. கீழ் அணிகளிடையே ஏற்பட்ட மோதலை தலைமை மட்டத்தில் ஐக்கியத்துக்கான பேச்சு வார்த்தையில் பேசித் தீர்த்திருக்கலாம். உண்மையான ஐக்கிய முன்னணிக்கான நோக்கம் இவர்களுக்கு இருந்திருக்குமானால் இப்பிரச்சனைக்கு தீர்வுகண்டிருக்கலாம். தங்களுடைய குழு நலன்களைக் களைய முன் வராவிட்டால் ஐக்கிய முன்னணி சாத்தியமற்றது. என்பதை இக் குழுக்கள் இப்போதாவது உணர்ந்து கொள்வார்களாக.

மீண்டும் அண்மையில் E.P.R.L.F., E.R.O.S., T.E.L.O., ஆகியவை சேர்ந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளதாக அறிவித்துள்ளார்கள். தமது மூன்று குழுக்களையும் L.T.T.E., P.L.O.T., உம் ஆக இன்று ஐந்து விடுதலை இயக்கங்கள் பிரதானமாக இருப்பதாகவும் வேறு இயக்கங்கள் இருப்பின் இவற்றில் ஒன்றுடன் இணைந்து கொள்ளலாம் என்ற அடிப்படையில் கருத்து வெளியிட்டார்கள். இவர்கள் தங்கள் மனவிருப்பப்படி ஐந்து பிரதானமான போக்குகள் மட்டுமே இருக்க முடியுமெனவும் வேறு போக்குகள் இருக்க முடியாது, எனவும் கருதுகிறார்கள். இவ் ஐந்து போக்குக்களைத் தவிர வேறு போக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள் உண்டா இல்லையா என அறிய மற்ற விடுதலை இயக்கங்களுடன் ஆழமாகப் பேசினாலே இவர்களால் புரிந்து கொள்ள முடியும். இவற்றுள் ஒரு சில தவிர ஏனையவை களத்தில் இல்லை என்பது தெளிவானது.

தமக்கிசைவான போக்குக்களையும், தமது நினைப்பில் தவிர்த்துவிட இயலா சக்திகளெனக் கருதும் இரு இயக்கங்களையும் மட்டுமே கணக்கிலெடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், ஏனைய இயக்கங்கள் இல்லாதொழிந்துவிடவும், சிறுகச்சிறுக கரைந்தும், உடைந்தும் தம்மிடம் வந்து விடுமெனவும் விரும்பியே இந்நிலைப்பாட்டை மேற்கொள்கிறார்கள்.

ஒவ்வோர் இயக்கமும் ஒவ்வோர் வர்க்கத்தினது, அல்லது வர்க்கப்போக்கினது வெளிப்பாடென்பதை இவர்கள் அறியத் தவறுகிறார்கள்.

அதனாலேயே ஐக்கிய முன்னணிதான் சாத்தியமானதும் அவசியமானதும் என்பதை உணரத்தவறி, இயக்கங்களை தம்மிடம் இணைக்கும் பயனற்ற போக்குகளிற்கு ஆளாகின்றனர். இவர்கள் உண்மையான நோக்கமுடையவர்களாயின் ஐக்கிய முன்னணி முயற்சிகளை, ஆயுதபலம் ஆட்களின் எண்ணிக்கையிலிருந்து ஆரம்பிக்காமல் கொள்கை வழி திட்டங்களில் இருந்து ஆரம்பித்து இருப்பார்கள். ஆனால் அதற்கு ஐக்கிய முன்னணி பற்றிய தீர்க்கமான நோக்கு இல்லாமலேயே ஐந்து இயக்கம் என்ற கோட்பாட்டை தூக்கிப் பிடித்தபடி தடித்த எழுத்துக்களில் "இக்கால கட்டத்தில் ஏற்படவேண்டிய வர்க்கங்களின் ஐக்கியம் பற்றியும் அவற்றின் நடைமுறைகள் பற்றியும். நாம் தீர்க்கமாக ஆலோசித்தாக வேண்டும்" (தோழர் பத்மநாபாவின் முதலாவது காங்கிரஸ் உரையிலிருந்து) என்று பொறிக்கிறார்கள். இப்படியான இவர்களது கூற்றுக்கள் 'எமக்கு குழப்பகரமாகவே உள்ளது.

மேலும் தமது கூட்டணியில் இணைய விரும்பின் யாரும் வந்து இணையலாம். அதற்கு எதுவித தடையும் கிடையாது எனக் கூறுகின்றார்கள். தமது பொதுத் வேலை திட்டத்தை மற்றைய இயக்கங்களுக்குமுன் வைத்து மனப்பூர்வமாகஏனைய இயக்கங்களுடன் பேசுவதன் மூலமே இணைப்பு சாத்தியமென்பதை ஏனோ இவர்கள் உணரத் தவறி உள்ளார்கள். பொது வேலைத் திட்டத்தை திட்டவட்டமாக முன்வைத்து ஏனைய இயக்கங்களுடன் மனம் திறந்து பேசாது வெறுமனே "கூட்டுக்குள் வா, கூட்டுக்குள் வா" என்று சொல்வது இவர்களிடம் பொது வேலைத்திட்டம் திட்டவட்டமாக இல்லையா எனும் சந்தேகத்தைக் கிளப்புகிறது. எப்படி இருப்பினும் ஐக்கியம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. இதுவரை இவர்கள் முன்முயற்சி எடுத்து ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்குவதில் அக்கறை கொள்ளவில்லை. இனியேனும் இவர்கள் தங்கள் அணுகுமுறையை மாற்றி கூட்டமைப்பை விரிவாக்கி ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்கமுன் நிற்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் ஒரு உண்மையான ஐக்கிய முன்னணியைக் கட்டுவது பின்தள்ளப்பட்டுக்கொண்டே போகிறது. இப்போதுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் இனஅழித்தொழிப்பிலிருந்து மக்களைப்பாதுகாக்கவேணும், ஒரு பொதுக்கொள்கையை உருவாக்கி ஓர் ஐக்கிய முன்னணியைக் கட்ட இயக்கங்கள் முன்வரவேண்டும்.

சகல குழுக்களும் நீண்ட காலப் நோக்கில் ஒத்துழைப்பைக் கருதி ஒன்றுக்கொன்று பரந்த நோக்குடன் உதவி செய்யவும், பரஸ்பர விட்டுக்கொடுத்தலுடன் செயற்படவும் வேண்டும். ஆயினும் இவ்விட்டுக் கொடுத்தல்களும் ஒத்துழைப்பும் தத்தம் சுயாதீன செயற்பாட்டை அடக்கிவிடாதபடியும் சுயாதீனத்தை அளவு மீறி வலியுறுத்தி கூட்டை பயனற்றதாக்காமலும் கவனித்துக் கொள்ளவேண்டும் எல்லா விடுதலை இயக்கங்களும் ஒன்றாகக் கூடி அமர்ந்து பொது வேலைத் திட்டத்தை மனம் திறந்து விவாதித்து பெறுவதினாலேயே ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்க முடியும். இத்தகைய உதவியும், விட்டுக் கொடுத்தலும் ஆக்க பூர்வமானவையாக இருக்க வேண்டுமேயன்றி, ஆக்கபூர்வமற்றவையாக இருக்கக் கூடாது.

**ஒத்துழைப்போம்!**

**மக்களைப் பாதுகாப்போம்!**

www.tamilarangam.net



# புரட்சிகர தலைமை பற்றி

இந்தக் காலகட்டம் உலக வரலாற்றிலேயே மிக உன்னதமானதாகும். இன்று உலகெங்கும் புரட்சிகர அலைகள் பெருகி வருகின்றன. மக்கள் புரட்சியை விரும்புகின்றார்கள். நாடுகள் விடுதலையை விரும்புகின்றன. ஒடுக்கப்பட்ட தேசங்களின் மக்கள் தம்மீதான தளைகளை நீக்கி சுயாதீனம் பெறுவதற்காக போராட்டப்பாதையில் முன்னேறி வருகிறார்கள். தேசங்கள், சுயாதிபத்தியத்திற்காகவும் தொழிலாளி விவசாயிகள் புரட்சிக்காகவும் இடையறாது பாடுபட்டு வருகின்றன.

தம்மீது நிலவும் ஒடுக்கு முறைக்கு எதிர்க் குரல்களை எழுப்பி, தமது மறுப்பைத் தெரிவித்து, அடக்கு முறைகளை தகர்த்தெறிய, அவர்கள் தம்மை அடக்கும் எதிரிகளுக்கெதிராக உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்கிறார்கள். ஈழத்தமிழினம் எக்காலத்திலும் தன்மீது திணிக்கப்பட்ட ஒடுக்குதல்களிற்கு எதிர்ப்புணர்வை வெளிக்காட்ட பின் நின்றதில்லை. அவர்களது எதிர்ப்புணர்வின் தன்மை விடுதலை உணர்வாக பரிணமிக்கும் காலம் வந்த போதும் அவர்கள் போராட்டத்தில் பின் நிற்கவில்லை.

மக்களது புரட்சிகர, விடுதலை விரும்பும் உணர்வானது அரசியற் செயற்பாடாக, ஒரு தீர்மானகாரமான சக்தியாக தொழிற்படத் துவங்கும் போது அது ஓர் ஒழுங்கு படுத்தப்பட்ட நிறுவன வடிவத்தைக் கைக்கொள்ள முனைகிறது. ஒடுக்குமுறை எப்படி ஒரு நிறுவன—அமைப்பு வடிவத்தைக் கொண்டதாக இருப்பதன் மூலம் வலுவாக செயற்படுகிறதோ அதேபோல விடுதலைப் போராட்டமும் ஓர் அமைப்பு வடிவினூடாக செயற்பட்டாலே தொடர்ந்து முன்னேற முடியும்.

ஓர் அமைப்பு வடிவ செயற்பாடு மத்தியப்படுத்துதலை வழிகாட்டி முன் நடத்திச் செல்லும் தலைமைப் பாத்திரத்தை உருவாக்குவது அவசியமானதும், தவிர்க்க இயலாததும், இயல்பானதுமாகும். மக்களின் அரசியல் உணர்வுகள், செயற்பாடுகள் செயல்பூர்வமாக வளரும்போது ஏற்படும் மத்தியப்படுத்தப்பட்ட அமைப்பு வடிவங்களே, கட்சிகள், இயக்கங்கள், பிற ஸ்தாபனங்களாகும். இவை மக்களது குறித்த உணர்வு, கருத்துக்களின் வழியே மக்களை வழி நடத்தி தமது பாத்திரத்தை நிறைவேற்றி வருகின்றன.

இப்படி மக்களது போக்குகளின் வெளிப்பாடாக ஸ்தாபனங்கள்—மக்களிற்கு தலைமை தாங்கும் அமைப்புகள்—தோன்றி வளர்ந்து செயற்படுவது போல ஓர் ஸ்தாபனத்தினது செயற்பாட்டின் போக்கில் ஒரு மத்தியப் படுத்தப்பட்ட தலைமை உருவாகிறது. இது வரலாற்றில் குழுக்களாலோ, சில தனிநபர்களாலோ, அவ்வப் போக்கின் தன்மைகட்கேற்ப நிறைவு செய்யப்படுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு அரசியற் போக்குகளின் மத்தியப்படுத்துதலின் விளைவுகளே, ஸ்தாபனங்களும் அவற்றின் தலைமைகளுமாகும்.

இந்த வகையில்தான், வரலாற்றின் பணிகளை நிறைவேற்றுவதற்கு சிறந்த பங்களிப்பு செய்த தலைவர்களை நாம் காண முடிகிறது. தமது கால சூழலில் தமது பணியை சிறப்பாக செய்து முடித்ததற்காக நாம் அவர்களை மதிக்கிறோம்; முன்னுதாரமாகக்கூட கொள்கிறோம். எனினும் கூட அவர்களை நாம், வர

www.tamilarangam.net



லாற்றினை தமது இஷ்டப்படி உருவாக்கிய கதாநாயகர்களாக, வீர புருஷர்களாக நாம் எண்ணுவதற்கில்லை. வரலாற்றுப் போக்கு அவர்களிற்களித்த கடமையை மிகமிகச் சிறப்பாக எதிர்பாத்ததிலும் உன்னதமாக செய்து முடித்தவர்கள் என்றே கணிக்க முடிகிறது.

''ஈழ விடுதலைப் போராட்ட ஓட்டத்தில் எத்தனையோ தனிநபர்கள் தனியாகவும், பொதுவாகவும், இயக்கமாகவும் ஈடுபட்டார்கள்; பங்களித்தார்கள். சிலர் இப்போராட்டத்தையே விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். ஒதுங்கிக் கொண்ட சிலர் மீண்டும் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டார்கள். ஒரு போராட்ட வரலாற்றில் தனிநபர்கள் வருவார்கள்; போவார்கள், ஆனால் அந்தக் கால வரலாறு நின்று விடுவதில்லை. சில குழுக்கள், சில இயக்கங்கள் தோன்றும்; மறையும் ஆனால் வரலாற்று ஓட்டம் தடைபட்டு நின்று விடுவதில்லை'' (க. பத்மநாபாவின் காங்கிரஸ் உரையிலிருந்து)

வரலாறு, வரலாற்று இயக்கப் போக்கானது தனதுதேவைக்கேற்ப தனக்குகந்த இயக்கங்களையும், தலைமை தாங்கும் நபர்களையும் சிருஷ்டிக்கிறது. நீண்ட நெடுங்கால நோக்கில பார்த்தால் எந்த தனிநபரும் அவர் எவ்வளவு உயர்ந்தவராயினும் சரி, வரலாற்றின் ஓட்டத்தில் மிகச் சிறியவர்கள்தான். நாம் இன்று மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஸ்டாலின், மாசேதுங் போன்ற மாபெரும் தலைவர்களை வழிகாட்டிகளாக, உயர்ந்த புருஷர்களாக கொள்கிறோம். ஆனால் பல்லாயிரமாண்டு போராட்டவரலாறு தொடர்ந்து முன்னேறிச் செல்லும்போது ஓர் ஆயிரம் ஆண்டுகளிற்குப் பின்பு மனிதகுலம் இவர்களைக்கூட இத்தனை முக்கியத்துவத்துடன் உணரப் போவதில்லை. சாதனைகளை தந்த மனிதர்கள் எவ்வளவு மகத்தானவராயினும் நீண்ட வரலாற்று ஓட்டத்தில் அவர்களது பாத்திரம் மிகவும் அற்பமானதொன்றேயாகும். இந்த வழியில் மட்டுமே நம்மால் தலைவர்களை கதாநாயகர்களாக அல்லாது வரலாற்றின் ஊழியர்களாக நோக்க முடியும்.

### எதிர்காலப் பிரஜையின் பாடல் ● ●

இன்னும் மலராத் தேசமொன்றில்
இருந்து வந்தவன் நான்
இங்கு பிறந்தது
நான் மட்டுமல்ல
நீ மட்டுமல்ல
நாம், சகோதரர்கள்...

தருதற்கு கை நிறைய
அன்புண்டு என்னிடத்தில்
'நாணய்' நிறைந்த
அன்பைவிட ஏதுமில்லை.
என்னிடம் ஓர் இதயமும்
அழுகைகளும் உண்டு.
ஆனாலும், அவை
என்னது மட்டுமல்ல...

இன்னும் மலராத் தேசமொன்றில்
இருந்து வந்தவன் நான்,
தருதற்கு நிறைய
அன்பினைத் தாங்கிய
நான்
இன்னும் மலராத் தேசமொன்றின்
பிரஜைகள் பலருள் ஒருவன்.

—மொஸாம்பிக் கவிஞர்
ஜொஸி. கரவெயின் ஹா

நன்றி ; ஈழநாடு, 1-4-84

தமிழில் ; என். சண்முகலிங்கன்

அவர்களிடமிருந்து கற்று அவர்களது பாதையில் தொடர்ந்து முன்னேற முடியும்.

எனினும்கூட குறுகியகால ஓட்டத்தில், ஓர் இயக்கப்போக்கின் ஒவ்வொரு கட்டங்களிலும் தலைமையின் பாத்திரம் பாரியதொன்றாவும், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமையும். வரலாற்று மொத்தத்திலும் முக்கியமில்லாததாகி உள்ள தனிநபர்கள் வரலாற்றின் ஒவ்வொரு தனி அங்கத்திலும்

www.tamilarangam.net



குறிப்பான கட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக பாதிப்புக்களை ஏற்படுத்துகிறார்கள் என்பது கவனிக்கப்பட வேண்டிய உண்மையாகும்.

ஒவ்வொரு காலகட்டத்திலும், சிறந்த, தகுதி வாய்ந்த தலைவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்கும்போது செயற்பாட்டில் முன்னேற்றம், சிறப்பு என்பன ஏற்படுகின்றன. வேறு சிலர் கடமையைச் செவ்வனே செய்வதற்கப்பால் 'ஒரு படி அதிகமாகவே சாதித்ததான' நிலைமை இல்லாது தமது பங்களிப்பை செய்து விடுகிறார்கள். தகுதி குறைந்த தலைவர்களோ, தவறான தலைமையோ ஏற்படும்போது பின்னடிப்புகளும் சீர்குலைவுகளும் ஏற்படுகின்றன. இப்பாதிப்புகள் குறித்தகாலம் வரை ஆதிக்கம் செலுத்துகின்றன. ஒரு தலைமை சிறப்பானதாகவோ, குறைவானதாகவோ இருக்கும்போது அது தனது தகுதிக்கேற்ப முன்னேற்றத்தையே, பின் நாளடைவிலே விளைவாகத் தருகிறது. இயக்கப் போக்குகளில் அத்தகைய தலைமைகள் ஏற்படுவதை - தலைவர்கள் தோன்றுவதை - ஓரளவு தற்செயலானது என்றே கூற வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் கூட விடுதலைப் போராட்டம் ஆயுதமேந்தும் போராட்டமாக மாறவேண்டிய முதல் நிலையில், அம்மாற்றுதற் பணியினை நிறைவேற்ற பலர் உருவாகி செயற்பட்டு வந்ததை மறக்க முடியாது. ஆரம்பத்தில் அத்தகைய இளைஞர் சக்திக்கு தலைமைநிலையிலும் உந்து சக்தியாகவும் 'சிவகுமாரன்' பங்காற்றியது மறக்கப்பட முடியாதது. அவரது செயற்பாடுகூட அவரது காலம், அக்கால ஸ்தாபன பலம் என்பவற்றால் வரையறுக்கப்பட்ட அளவிலேயே இருந்தது; இருக்க முடியும். அவர் இழக்கப்பட்டதும் வரலாற்று ஓட்டம் தேங்கிவிடவில்லை. ஒரு சில மாதங்களிலேயே 'பிரபாகரன்' அப்பணியை தொடர்ந்து மேற்கொண்டார்.

எனினும்கூட அவ்விளைஞர் குழுக்களின் வளர்ச்சி ஆயுத பலத்தில் மட்டுமிருந்ததேயொழிய, மக்கள் சக்தியை திரட்டும் ஸ்தாபன பலத்திலோ, நாம் கோரும் விடுதலைப் பாதையை வரையறுத்து, அதில் இட்டுச் செல்லக் கூடிய அரசியல் தெளிவு, சித்தாந்த பலத்திலோ, அவ்வளர்ச்சி காணப்படவில்லை.

இந்த இடைவெளி நிரப்பப்படுவது வரலாற்றில் தேவையாக இருந்தது. இயக்கமானது அரசியல் மயப்படுத்தப்படுவதும் மக்களியக்கமாக மலர்வதும் தவிர்க்கவியலாத அவசியமாக இருந்தது. இந்த வழியிலேதான் தமிழீழ விடுதலைப் போரானது 'மக்களின் யுத்தமாக' வளர முடியும். இந்த வகையில் ஏற்பட்ட தேக்கத்தினை 'சுந்தரம்' (சிவசண்முக மூர்த்தி) எனும் போராளி தனது இடையறா முயற்சியுடன் முன்னெடுத்தார். ஏக காலத்தில் அரசியல் பத்திரிகையின் ஆசிரியராகவும் ஆயுதப் படைகளின் தளபதியாகவும் செயற்பட்டார். இவர் வீழ்த்தப்பட்ட பின்பு அக்குழுவின் அரசியல், ஸ்தாபன வளர்ச்சியில் சில குலைவுகள் ஏற்பட்டன. எனினும் கூட வரலாற்று ஓட்டமானது, ஏற்பட்ட இடைவெளிகளில் அப்பணியை நிறைவேற்ற சரியான வழியை மேற்கொள்ளும்—அரசியற் தலைமையின்கீழ் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும்—'மக்கள் யுத்தப் பாதை'யில்நடைபோடும்-பிற இயக்கங்களைத் தோற்றுவித்தது. தமிழீழ தேசிய விடுதலை முன்னணியுடன் இன்னும்சில சிறு குழுக்களும் கூட அப்போக்கினது வாரிசுகளேயாவர்.

இவ்வாறு தமிழீழ போராட்டத்தில் கடந்த பத்தாண்டு வரலாற்றை நோக்கும் போதே விடுதலைப் போராட்டம் சரியான வழியை நாடி முன்னேறி வந்தது புலனாகின்றது. இனி சரியான பாதையில் முன்னேறிச் செல்லும் முயற்சியும், அப்பணியை முன்னெடுக்கும் தலைமைகளும் தவிர்க்கவியலாதவைகளாக இருக்கும்.

மனித சமூகத்தின் வளர்ச்சியிலும், மனித சமூகத்தின் அறிவு, விஞ்ஞான வளர்ச்சியிலும் கூட ஒவ்வொரு கட்ட முன்னேற்றத்தையும் வலுப்படுத்தி அவற்றோடு — அவற்றையே பூசித்து 'மம்மி வழிபாடு' செய்தபடி—நின்றுவிடாது, அவற்றினை அடிப்படையாக்கி தொடர்ந்து முன்னேறுவதுதான் நடைமுறை

www.tamilarangam.net



யாக இருந்தது விஞ்ஞான வளர்ச்சியை நோக்கும்போது இந்த உண்மை வெளிப்படையாகவே தெரியக் கூடியதாக உள்ளது.

விடுதலைப் போராட்டமும், சமூக வளர்ச்சிக்கான போராட்டங்களும்கூட இந்த 'விதி'யை மீறிச் செயற்பட முடியாது. எந்த வளர்ச்சிப் போக்கிலும் நிலையாக இருப்பதற்கு இடமில்லை.

அவ்விதத்தில் வரலாறு தொடர்ந்து முன்னேறிச் செல்கையிலேயே தலைவர்கள், இயக்கங்கள் விளைவாகின்றன. அப்படித் தோன்றிய இயக்கங்களும், தலைவர்களும் மக்களிடம் சென்று அவர்களிற்கு வழிகாட்டவும், அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும் செய்வதன் மூலமே தொடர்ந்த முன்னேற்றத்திற்கு பங்களிப்பைச் செய்ய முடியும். தலைமை என்பது வரலாறு தனக்கு விதிக்கப்பட்ட பணியை செய்யும் சிறந்த ஊழியன் தான். அது அவ்வாறுதான் இருக்க முடியும்.

## தத்துவமும் நடைமுறையும் ● ●

கேள்வி ; சார் ரெஜிஸ் டெப்ரே டெல்லியில் பேசியுள்ளதைப் பற்றி...

பதில் : சே குவேராவுடன் உடனிருந்து மூன்றும் உலக நாடுகள் என்றழைக்கப்படும் ஏழை நாடுகளுக்கு 'சே' வழிகாட்டி என்றுபேசிய 'டுப்ரே'யா சார் இது? இந்திரா அம்மையார் தான் உலகைக் காக்க வழி என்று CHOGM மாநாட்டில் கூறியுள்ளாரே...சும்மாவா? சிறையிலும் காடுகளிலும் வாசம் செய்த ரெஜிஸ் டெப்ரே இப்போது பிரான்ஸ் அதிபர் மிற்றரான்டின் அயல் விவகார அமைச்சர் !

நன்றி ;

பிருந்தாவனம் (மாணவர் இதழ் 6)

மக்களே, மக்கள் மட்டுமே...

இன்று பலதரப்பட்ட குழுக்களின் செயற்பாடுகளை நோக்கும்போது இந்த அடிப்படை உண்மைகள் மறக்கப்பட்டுவிட்டது போலவே தோன்றுகிறது. அவர்கள் மக்களிடமிருந்தே, இயக்கப் போக்குகளிலிருந்தே நாம் தோன்றினோம் என்பதையும், தமது பணி மக்களை தெளிவூட்டி, திரட்டி மக்கள் யுத்தப் பாதையில் நடைபோட பணியாற்றுவதே என்பதையும் மறந்துவிட்டனர். அதற்குப் பதிலாக, 'விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய சில கதாநாயக மாந்தர்களே வரலாற்றை தமது 'சுதந்திரமான' எண்ணப் போக்கின்படி உருவாக்குகிறார்கள்' என்ற கருத்துப்போக்கினது பாதிப்பின்கீழ் உள்ளனர். இத்தகைய 'அதிமனித வாதமா'னது பலதரப்பட்ட தவறுகளிற்கும் பின்னடைவுகளிற்கும் காலாகிவிடும்.

'மக்கள் கருத்துக்களை அறிந்து அவர்களை ஒன்று திரட்டி அவர்களது விடுதலைக்காக போரிட அவர்களுக்கு உதவுவது' என்ற உணர்வு இவ்வாறு வரையறையற்ற அதிகாரங்களை தன்னகத்தே தலைமையானது குவித்துக்கொள்வது, அமைப்புகளின் ஏனைய பரந்துபட்ட உறுப்பினர்களும் மக்களும்கூட ஊக்கமோ, செயற்பாடோ அற்று 'கண்மூடித்தனமாக பின்பற்றவும், வழிபடவும் மட்டுமே தெரிந்தவர்களாக இருக்கக்கூடிய நிலைமையைத் தோற்றுவிக்கும். இத்தகைய நிலைமை அமைப்புக்களை, பூர்ஷ்வா பாராளுமன்ற கட்சிகளாக பச்சையான சர்வாதிகாரத்தைக் கொண்ட குட்டி முதலாளிய பயங்கரவாதக் குழுக்களாகவே சீரழித்து விடும்.

மேலும் ஒருசில தனி நபர்கள்மீது வைக்கப்படும் கண்மூடித்தனமான நம்பிக்கை, வழிபாடு, அவர்கள் தவறிழைக்கும்போதும், ஏன் துரோகிகளாக மாறி விடுதலைப் போராட்டத்துக்கு குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளை செய்ய முற்படும்போதும்கூட, அவர்களது நடத்தைகளை வெளிப்படையாக ஆராயத் தடையாவதுடன் அவர்களைப் பின்பற்றவும், போராட்டத்துக்கு தற்காலிகமாகவெனினும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தவுமே வழி

www.tamilarangam.net



வகுக்கும். அவ்வாறு ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும்கூட தனிநபர் சர்வாதிகாரப் போக்கு தவிர்க்கப்பட முடியாததாகும். அத்தகைய அமைப்புகளில் கூட்டுச் செயற்பாடு, தலைமைக்குழு முறைமை, என்பன வெறும் வாய் வார்த்தைகளாகவே இருக்கும். இந்நிலைமை தலைமையின் தகுதியை கீழிறக்குவதாகவும் பொருத்தமற்றதாகவும் ஆக்கும்.

மக்களது கண்மூடித்தனமான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு (இந்நம்பிக்கை 'சுதந்திரன்' போன்ற பத்திரிகைகளின் இடையறாத பிரச்சாரத்தின் விளைவேயாகும்) தலைமைப் பொறுப்புகளிற்கு வந்த அமிர்தலிங்கம், காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா கும்பல்கள் பிற்காலத்திலும் கூட மக்களால் வெகுளித்தனமாக நம்பப்பட்டதும், அவர்களது சுயரூபம் அம்பலமாகவும் இளைஞர்கள் அவர் பிடியிலிருந்து விடுபட நீண்ட நாட் சென்றதும் நமக்கெல்லாம் ஒரு பாடமாகும்.

நம்மில் பல அமைப்புகள், அவை, மார்க்சிச-லெனினிச சித்தாந்தத்தை தமது அடிநாதமென பிரகடனப்படுத்துவதாக இருந்த போதிலும்கூட இத்தனி நபர் முக்கியத்துவத்தை அவசியமற்றவகையில் மேற்கொள்ளுகின்றன. மக்களை ஏமாற்றி, அவர்களை மயக்கி அவர்களிடம் ஆதரவு பெறவும், 'வாக்குச்சீட்டு வேட்டை' நடத்தவும் முற்படும் முதலாளிய பிற்போக்கு கட்சிகளிற்கே மக்கள் முன் வழிபாடு தெய்வங்களை நிறுத்துவது அவசியமானதாக உள்ளது. அது மக்களை விழிப்படைய விடாது, வெறும் பார்வையாளர்களாகவோ, ஆதரவாளர்களாகவோ, எடுபிடிகளாகவோ ஆக்க எண்ணும் முதலாளியவாதிகளிற்கு சரியாக இருக்கலாம், ஆனால் ஒரு புரட்சிகர அணிக்கு தீங்கானதாகும்.

ஒரு புரட்சிகர இயக்கத்தின் பணி மக்களிற்கு அறிவும், தெளிவும் ஊட்டி அவர்களை தன்னுணர்வடையச் செய்து அவர்கள் 'தமது விடுதலைக்கு தாமே போராடும்' நிலைக்கு உயர்த்துவதாகும். அத்தகைய புரட்சிகர அணிதான் மக்களை தெளிவூட்டவும், தமது அமைப்பின் கீழ் திரட்டவும் முடியும். அவர்கள் அப்பணிகளை செய்யத் தவறி 'மக்களை மயக்கியும் பிரமைகளுக்கும் பொய்யான நம்பிக்கைகளிற்கு ஆளாக்கியும் அவர்களது நம்பிக்கையை வென்றெடுக்க முயற்சிப்பார்களெனில், சிலசமயம் அத்தலைவர்கள் மக்களது அபிமானத்தை வென்றெடுக்கலாம்; தம் பின்னால் மந்தைகளாக்கிட கருதலாம். ஆனால் புரட்சி, விடுதலைப் பணியை செய்து விட முடியாது.

உழைக்கும் மக்களில் பெரும்பான்மையினரின் பார்வைகளில் ஒரு மாற்றம் இல்லாதபடி புரட்சி நடப்பது அசாத்தியம். இந்த மாற்றம் வெகுசனங்களினது அரசியல் அனுபவங்களிலிருந்தே பெறப்படுகிறது என்பதனை நாம மறந்து விடக் கூடாது.

தலைமைப் பொறுப்பிலுள்ளவர்கள் தம்மை இன்னமும் சிறியவர்களாகவும், மாணவர்களாவும், "இராமர் அணைக்கு மண் எடுத்த அணில்களாவும்" கருதக் கற்றுக் கொள்ள வேண்டும். சிறிதேனும் வேறு விதமாகக் கருத (தலைக்கனத்தால் திருப்பப்பட) இடமளிப்பாராயின் ஒரு 'புரட்சியாளர்' என்ற நிலையிலிருந்து விடுபட நேரும். புகைப்படங்கள், விழாக்கள், மாலைகள் போட்டு இன்னோரன்ன பிற கௌரவங்கள் எல்லாம் ஒரு புரட்சியாளனுக்கு பொருத்தமற்றவையாகும். அவன் அந்தளவு கௌரவங்களுக்கு பொருத்தமானவனல்ல. மேலும் வளரவும் சாதனைகளை செய்து முடிக்கவும் வேண்டியவன்.

இயக்கங்களிற்குள் இன்று தலைமை உறுப்பினர்களை நிலையானவர்களாகப் பிரகடனப்படுத்தும் போக்குக் காணப்படுகிறது. மக்கள் இன்று குறிப்பிட்ட இயக்கங்களை விடவும் அவற்றின் பிரபல மிகுந்த தனிநபர்கள் மீதே நம்பிக்கை வைப்பதான போக்கும் பரவலாக காணப்படுகிறது. இந்தப் பண்பு அமைப்புகளிற்குள்ளும் வளர்வது சாத்தியமானதே. இயக்கமும் தனிநபரும் முரண்பட நேரின் மக்கள் பிரபலமான தனிநபரின் பக்கம் நிற்பதற்கே இந்நிலை வழியாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நம்முடைய போதனை, வெறும் "வறட்டுத்தனமான" பாடமல்ல; இதற்கு மாறாக, அது செயலுக்கு வழியைக் காட்டுகிற வழிகாட்டி என்று மார்க்சும் எங்கல்சும் எப்போதும் கூறி வந்திருக்கிறார்கள். தத்துவ வாக்கியங்களை, அழகாக அமைத்து மனப்பாடம் செய்வது, திரும்பத் திரும்ப சொன்னதையே ஒப்பிப்பது என்ற கருத்தைமார்க்சும்எங்கல்சும்பரிகாசம் செய்தனர். மனப்பாடம் செய்வதற்கு ஏற்றவாறு அமைக்கப்படும் வாக்கியங்கள் அதிக அளவு பொதுப்படையாக நிறைவேற்ற வேண்டியிருக்கும் வேலைகளை வரையறுத்துக் கூறுமேயொழிய, வேறு உருப்படியாக அந்தந்த சமயத்துக்கு வழிகாட்டாது. இந்தப் பொதுப்படையான வேலைகள், என்றென்றைக்கும் ஒரே மாதிரி இருக்காது; சரித்திரப் போக்கில் ஒவ்வொரு தனித்தனியான கட்டத்திலும் தென்படுகிற ஸ்தூலமான பொருளாதார நிலைமைகளாலும், அரசியல் நிலைமைகளாலும் திருத்தப்படக் கூடியவை.......மார்க்ஸிஸ்ட்டுகள் உண்மையான வாழ்க்கையைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; ஸ்தூலமான யதார்த்தங்களைப் பார்க்க வேண்டும்; நேற்றைய தத்துவத்தைப் பிடித்துக் கொண்டு, விடாமல் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது—இந்த மறுக்க முடியாத உண்மையை உணர்வது தான் முக்கியம்"

—லெனின்

சில அமைப்புகளில் சிலரது தலைமையை ஏற்பதே உறுப்புரிமைக்கு முன் நிபந்தனையாக உள்ளது. 'அவரே' எல்லாவற்றையும் உருவாக்கினார்; உருவாக்குகிறார். அவரே எல்லாம், அவரே சரியானவர்! எனும் கருத்துக்கள் வளர்கின்றன. இது தவறானதாகும். அமைப்புகளின்மேல் தனிநபர்களைத் திணிக்கும் போக்காகும்.

மனித சமுதாய வளர்ச்சியில் மக்களுக்கும், தனிநபர்களிற்கும் உள்ள பாத்திரம் பங்களிப்பு பற்றிய அரைகுறையான அறிவே நம்மை தனிப்பட்டவர் ஆதிக்கம் என்ற தவறான கருத்துக்கு இட்டுச் செல்கிறது. உலக வரலாற்றில் புரட்சித் தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் ஒப்பிடக்கூடிய பங்களிப்பைச் செய்த மகத்தான உயர்ந்த மனிதர்கள் இருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலேயே அவர்கள் புரட்சியாளர்களிடமும், மக்களிடமும் மிகுந்த நம்பிக்கையைப் பெறுகிறார்கள். ஆனால் நாம் இந்த அம்சத்தை அமைப்புகளின் மேல் எந்தஒரு தனிப்பட்ட நபரின் மதிப்பை—அதிகாரத்தை—நிறுத்துவது, வலிந்து தனிநபர்களைப் பிரபலப்படுத்துவது ஆகிய போக்குடன் சேர்த்துக் குழப்பியடிக்கக் கூடாது. அப்படிப்பட்ட நம்பிக்கை, மதிப்பு, கௌரவம், எல்லாம் போராட்டத்தின் போதுதான் உருவாக முடியும்.

மேலும் உலகின் எவ்வியக்க வரலாற்றிலும், இத்தகைய நடைமுறைகளை நாம் கண்டதில்லை. இத்தகைய போக்குகள் விடுதலைப் போராட்டத்துக்கும் அதனை முன்னெடுக்கும் புரட்சிகரமான இயக்கங்களுக்கும் நன்மை பயப்பதாக அமையாது

புரட்சிகர, விடுதலை இயக்கமானது தனது எல்லா நபர்களும் சமமான முக்கியத்துவம் வாய்ந்தவர்கள், வேலைகள் பலதரப்பட்டவையாக உள்ள போதும் யாவும் அவசியமானவையே என்பதனை உணர்விற் கொள்ளவேண்டும். எல்லோரும் ஒன்று கூடிச் செயற்படும் போது மட்டுமே, பணியானது நிறைவேற்றப்படக் கூடியதாக அமையும், எனவே எந்த ஒரு நபரையும் ஒதுக்கவோ, உயர்த்திப் பிடிக்கவோ கூடாது.

நாம் மக்களின் புரட்சிகர விடுதலை உணர்வின் விளைவுகளாக உருவாகியவர்கள். எமது பணி மக்களிடமிருந்து கற்று மக்களது தேவையை அடைய—விடுதலையை வென்றெடுக்க—வழிகாட்டி, அணிதிரட்டி பங்கேற்க செய்வதேயாகும். எனவே பாராளுமன்ற 'வாக்குச் சீட்டு' அரசியலைப் போலன்றி நாம் மக்களை பாமரர்களாக பராமரிக்கும் வேலையைச் செய்யாது, விழிப்புணர்வு பெறச் செய்யவேண்டும். அது தலைமை தாங்கும் அமைப்பும் அதன் தலைவர்களும் கூட மக்களுடன் வேறுபாடற்ற உறவைக் கொள்வதினாலேயே சாத்தியமாகும்.

www.tamilarangam.net



# மொசாட்

சர்வதேச நாடுகளில் நடக்கும் புரட்சிகர விடுதலைப் போராட்டங்களையும் கெரில்லா யுத்தங்களையும் முறியடிக்க நவீன ஆயுதங்களாலும், பீரங்கிகளாலும் முடியாதென்பதை உணர்ந்து கொண்ட பிற்போக்கு நாடுகள் எதிரியின் நடவடிக்கை பற்றிய ஆய்வின் அறிவியலிலேயே தமது இராணுவ பலத்தை நிலைநிறுத்திக் கொண்டுள்ளன. இதற்கான ஆய்வுகளில் உளவு ஸ்தாபனங்களே பெரும் பங்கு வகிக்கின்றன. இதுபோன்ற உளவு ஸ்தாபனங்களில் ஒன்றே இஸ்ரேல் நாட்டின் 'மொசாட்' (MOSSAD)

''அறிவைப் பிரதான பாதுகாப்புக் கருவியாகக் கொண்ட சிறிய நாடுகளின் காலம் ஒன்று உருவாகும்'' என்ற ''சார்ல்ஸ் புரூட்டஸ் ஸ்டீன் மெற்றிஸ்'' (Charles Proteus Steinmetz) இன் கூற்றுக்கு சிறந்த உதாரணமாக இஸ்ரேல் விளங்குகின்றது. இவ் இஸ்ரேல் அரசானது அமெரிக்க ஏகாதிபத்திய அரசின் நலன்களுக்கு இசைவாகவும், உலக முற்போக்கு விடுதலை இயக்கங்களுக்கு எதிராகவும் செயற்படுகின்றது. இதில் ''மொசாட்'' இன் பங்கு மிக முக்கியமாகும். இந்த ''மொசாட்'' உளவு துறையையே ''ஜெயவர்த்தனா'' அரசும் தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டத்தை நசுக்குவதற்கு பயன்படுத்துகிறது. இம் ''மொசாட்'' இன் தோற்றம் வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வது இன்றைய சூழலில் மிகவும் அவசியமாகும்.

சுதந்திரத்தைத் தொடர்ந்து இஸ்ரேல் உளவுத் துறையை அப்போதைய பிரதமர் ''டேவிட்பென் குரியன்'' (David Ben Gurion) உருவாக்கினார். சுதந்திரத்துக்கு முன் இருந்த உளவு ஸ்தாபனங்களின் வடிவின் அடிப்படையிலேயே ஐந்து பிரதான ஸ்தாபனங்களை ஸ்தாபித்தார்.

இவற்றுள் ஒன்று ''ஷை'' (Shai). இது சுதந்திரத்துக்கு முன் பலஸ்தீனத்தில் குடியேறிய யூதர்களினால் உருவாக்கப்பட்ட இரகசிய இராணுவமான ''ஹகானா'' (Haganah) வின் உளவுத்துறைப் பிரிவாகும். பின்னர் இக் 'ஹகானா' இஸ்ரேலிய அரசின் பாதுகாப்பு பிரிவாகமாற 'ஷை' தொடர்ந்தும் தனியான பிரிவாக உளவு வேலைகளில் ஈடுபட்டது. இன்னோர் உளவு ஸ்தாபனமான ''ஷின் பேத்'' (Shin Beth) உள்நாட்டின் பாதுகாப்பிற்காக உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றது. மூன்றாவது பிரிவான ''அலியாஹ் பேத்'' (Aliah Beth) சட்டபூர்வமற்ற முறையில் ஆட்களை கடத்தி வந்து குடியேற்றியது. அதாவது அரபு நாடுகளில் வசித்த யூதர்கள் தப்பி வந்து பலஸ்தீனக் கிராமங்களில் குடியேற உதவி செய்தது. வெளிநாடுகளில் உள்ள உளவாளிகளுடன் தொடர்புகளைப் பெறுவதற்கென்று நான்காவது ஸ்தாபனம் இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சினால் உருவாக்கப்பட்டது. ஐந்தாவது உளவு ஸ்தாபனம் பொலிஸ் துறையின் உளவுப் பிரிவாக செயற்பட்டு வந்தது.

1948 சுதந்திரத்தை தொடர்ந்து இந்த 5 உளவு ஸ்தாபனங்களும் முழுமை பெற்றன.. இக்கால கட்டத்தில் இக்குழுக்களிடையே குழப்பங்களும் ஏற்படத் தொடங்கின. பொறுப்புக்கள் பற்றிய தெளிவான வரையறையோ, அன்றி நடவடிக்கைகள் பற்றிய தெளிவான வழிகாட்டல்களோ இருக்கவில்லை. வெவ்வேறு குழுக்களிடையே காணப்பட்ட போட்டியும், பொறாமையும் விடயங்களை மேலும் சிக்கலாக்கின. இக்குழப்பத்தை குறைப்பதற்கு அப்போதைய பிரதமரான பென்குரியன், 1951இல் உளவு ஸ்தாபனங்களை ஒன்றுபடுத்தி மீளமைப்பாக்கினார்.

''அலியாஹ் பேத்'' உம் பொலிஸ் உளவுத் துறையும் முன்பிருந்தது போலவே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புகளுடன் ''ஷின் பேத்'' உள்நாட்டுப் பாதுகாப்பை கவனிக்கும் பொறுப்பையும் மேற்கொண்டது. மற்றெல்லாப் பொறுப்புகளையும் இரண்டு பிரதான அமைப்புகளிடையே பங்கிடப்பட்டன. இதிலொன்று ''அமான்'' (Aman) என அழைக்கப்படும் இராணுவ உளவு ஸ்தாபனமாகும். தகவல் சேகரித்தல் போன்ற இராணுவ சார்பான விடயங்களில் விரிவான அக்கறை கொண்டு ஆயுத படைகளுடன் நெருக்கமாக வேலை செய்யத் தொடங்கியது.

ஏனைய கிளைகளைவிட தளர்த்தப்பட்ட வரையறைகளையும் பல்வேறு வகைப்பட்ட பரந்த விரிவான வீச்சங்களையும் கொண்ட பொறுப்பு, மற்றைய பிரதான குழுவுக்கு கொடுக்கப்பட்டது. உளவு வேலைக்கும் விசேட வேலைத்திட்டங்களுக்கும் பொது விலான் அமைப்பு என்பதால் சுருக்கமாக ''மொசாட்'' எனப்படும் பெயரால் மேற் கூறிய அமைப்பு அழைக்கப்பட்டது. இஸ்ரேலின் கவனத்தை ஈர்க்கும் எந்த ஒரு வெளிப்பிரதேசத்திலிருந்தும் கிடைக்கும் தகவல்களை கூடி ஆராய்வதே இதன் அடிப்படை இலக்காக இருந்தது.

இஸ்ரேலிய இருப்பிற்கான போராட்டத்தில், ''மொசாட்''ஐ, ஒரு சிறந்த ஆயுதமாக ''பென்குரியன்'' கருதினார். இன்று உலகில் உள்ள சிறந்த உளவு ஸ்தாபனங்களான K.G.P., C.I.A., பிரிட்டிஷின் D 16 போன்றவற்றின் வரிசையில் (ஆள்பலம், நிதிபலம் உட்பட) ''மொசாட்'' உம் நிற்கின்றது என ''ரைம்'' (Time) சஞ்சிகை கூறுகின்றது.

''மொசாட்'' தனது குறுகிய செயற்பாட்டுக் காலத்தில் வெற்றி தோல்வி இரண்டையும் சந்தித்தது 1973இல் 'முனிச்' (Munich) ஒலிம்பிக் இல் இஸ்ரேலிய வீரர்கள் கொலை செய்யப்பட்டதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக ''மொசாட்''டினால் தவறுதலாகச் செய்யப்பட்ட ஒரு கொலை மூலம் பொலிசிடம் பிடிபட்டது. இச்சம்பவத்தினால் ''மொசாட்'' பிரபல்யமடைந்தது.

இவ்வாறாக பிரபல்யமடைந்ததை தவிர்க்க ''மொசாட்'' தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தது. இதை மிக ரகசியமாகச் செய்வதற்கு 'கருத்து முதல்வாதக் கோட்பாடும்,' உயர்ந்த நாட்டுப் பற்றும் கொண்டு செயற்படக் கூடியவர்களையே பயன்படுத்தியது. இஸ்ரேலைப் பாதுகாப்பதே ''மொசாட்''டின் ஓரே நோக்கம் என்று அதன் உளவாளிகளுக்கு வலியுறுத்தப்பட்டது என அதன் நீண்ட நாளையத் தலைவரான ''ஹேரல் இஸர்'' (Isser Harel) என்பவர் கூறுகிறார். இவரின் உழைப்பே ''மொசாட்'' இன் வளர்ச்சிக்கு மிகவும் காரணமாக அமைந்தது. இவன் மற்றவர்களைக் கொண்டு வேலை செய்விப்பது மட்டுமல்ல தானே பல நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டான். இவன் இஸ்ரேலிய பிரதமருக்கு மட்டுமே விளக்கமளிக்க கடமைப்பட்டவன். ''மொசாட்''டின் வரவு செலவு சம்பந்தமாக எந்த அமைச்சர்களுக்கும் பதில் அளிக்க வேண்டியிருக்கவில்லை. ''எனது பையன்களுடன் ஒப்பிடும் போது ஜேம்ஸ் பொன்ட் கதாநாயகர்கள் பொழுதுபோக்குக்காகத் துப்பறிபவர்கள்'' என்று இவன் அடிக்கடி கூறுவான். இவ்வளவு திறமை வாய்ந்த உளவு ஸ்தாபனமாக ''மொசாட்'' விளங்குகிறது.

## ● மேலும் சில குறிப்புகள்

- உலகிலேயே வேறெந்த நாட்டைப் போலல்லாது ஒரு இராணுவமயப்படுத்தப்பட்ட பொருளாதாரமாக இஸ்ரேலின் பொருளாதாரம் உள்ளது. உலகத்தில் மற்ற நாடுகளிலும் பார்க்க ஆயுதங்களையும், இராணுவ சேவையையும், ஏற்றுமதி செய்வதிலேயே கூடுதலாகத் தங்கியுள்ளது.
- ஆபிரிக்க, இலத்தின் அமெரிக்க நாடுகளுக்கான அமெரிக்க இராணுவ உதவி இஸ்ரேலின் ஊடாகவே நிகழ்கின்றது.
- கௌதமாலா, நமீபியா, தாய்வான், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், சிலி,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொலிவியா, இலங்கை போன்றநாடுகள் தத்தமது மக்களின் விடுதலை உணர்வை நசுக்க இஸ்ரேலிய இராணுவ உத்தியோகஸ்தரைப் பயன்படுத்துகின்றன.

- தென்னாபிரிக்க இனவெறி ஆட்சியை நிலைநிறுத்துவதில் இஸ்ரேல் பிரதான பங்கு வகிக்கின்றது.
- இஸ்ரேலிய தொழிலாளர்களில் 25% இராணுவ சம்பந்தமான தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர்.
- இஸ்ரேலின் வருடாந்த உற்பத்தியில் 30% பங்கை இராணுவ உற்பத்தித் துறை வகிக்கிறது.
- அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ்-பிரிட்டன் என்பவற்றுக்கு அடுத்தபடியாக ஐந்தாவது இடத்தை இஸ்ரேல்இராணுவ உற்பத்தியில் வகிக்கிறது.
- CIAஇன் பின்னணியில் கொண்டூரஸ்இலிருந்து இயங்கும் நிக்கரகுவா ஆட்சிக்கெதிராக இயங்கும் சன்டினிஸ்ரா எதிர்புரட்சியாளர்களுக்கு மொசாட் ஆயுத உதவி செய்கின்றது.
- அமெரிக்க செய்திகள், எடுக்கும் படங்கள் உளவு வேலைக்காக இஸ்ரேலுக்கு உடனுக்குடன் அனுப்பப்படுகின்றது. இப்படங்கள் மத்திய கிழக்கில் எதிரிப் படைகளின் நடமாட்டங்களை உடனுக்குடன் அறிய உதவுகிறது.
- ஆபிரிக்காவில் சோவியத் ஆதிக்கத்துக்கு எதிராக சாட், சூடான், எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் இஸ்ரேல் செயல்படுகின்றது.
- லெபனனில் உள்ள கிறீஸ்தவப் படைகளுக்கு வழிகாட்டி, பாலஸ்தீன அகதி முகாம்களில் ஏயாளமானோரை படுகொலை செய்தது,மொசாட்டின் நடவடிக்கைகளில் முக்கியமானதொன்று.
- 1984 ஒகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தமிழீழத்தில் நடைபெற்ற சிறிலங்க இராணுவத்தின் நடவடிக்கைகளான வல்வெட்டித்துறைக் கிராமத்தை முற்றுகையிட்டு 500இற்கு மேற்பட்ட மக்களை, கைது செய்தது, வவுனியாவுக்கருகில் பஸ்சை வழிமறித்து பயணிகளைச் சுட்டுக் கொன்றது போன்ற சம்பவங்கள் (பலஸ்தீன மக்களுக்கெதிரான இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள்போல்) மொசாட்டின் வழிகாட்டலிலேயே நிகழ்ந்துள்ளது. ●

---

● தன்னுடைய குறைபாடுகள் தன் கண் முன் எடுத்துக் காட்டப்படுவதைப் பார்த்து பயப்படாமலிருக்குமேயானல், தன்னுடைய தவறுகளையும் குறைபாடுகளையும் தானே எடுத்துக்கூறி விமர்சனம் செய்வதற்கு அஞ்சாமல் முன்வருமேயானல், அந்தக் கட்சியை எவராலும் அசைக்க முடியாது; தன் தவறுகளையும் வேலையில் காணும் குறைபாடுகளையும் அது தன் கண்களை மூடிக் கொள்ளாமல் தெளிவாகப்பார்க்குமேயானல் கட்சி வேலையில் காணும் குற்றங் குறைகளிலிருந்து அது படிப்பினைகளைக் கற்று தன் ஊழியர்களுக்கு அப்படிப்பினைகளை எடுத்துக் காட்டி போதிக்குமேயானல், தன் தவறுகளை காலம் கடப்பதற்குள் எப்படி நிவர்த்தி செய்வது என்று அது வழி தெரிந்துகொண்டிருக்குமேயானல், அந்தக் கட்சியை எந்த சக்தியாலும் வெல்ல முடியாது.

ஒரு கட்சி தன்னுடைய சொந்த தவறுகளை மறைக்குமேயானல், கடினமான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதென்று தன் கண்களைப் பொத்திக் கொள்ளுமேயானல், "எல்லாம் சரியாகவே இருக்கின்றன!" என்று பாசாங்கு செய்வதன் மூலம் தன் குறைபாடுகளை மழுப்புமேயானல், தன்னுடைய குறைபாடுகள் எடுத்துக் காட்டப்படுவதைப் பார்த்து பொறுமையிழந்து ஆத்திரப்படுமேயானல், தன் குறைபாடுகளைத் தானே எடுத்துக் கூறி விமர்சனம் செய்வதைத் தொல்லையாகக் கருதி கைவிடுமேயானல், தன்னைப் பற்றி மிகவும் பெருமையாக நினைத்துக் கொண்டு திருப்தி மனப்பான்மை கொள்ளுமேயானல், தன்னுடைய வீண் பெருமைகளைப் பற்றி பேசுவதில் மனமகிழுமேயானல் தனக்கு கிடைத்த வெற்றிகளைப் பார்த்து சந்தோஷப்பட்டு குறட்டை விடுமேயானல், அந்தக் கட்சி நிச்சயம் அழிந்துபோகும்.

'போல்ஷேவிக் கட்சியின் சரித்திரம்'
என்ற நூலிலில்இருந்து

www.tamilarangam.net



# மக்கள் திரளமைப்புக்களும் தேசிய விடுதலைப் போராட்டமும் தேசிய விடுதலை இயக்கமும்

● ●

வர்க்கப் போராட்டத்தையும் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் எப்படி இணைப்பது? கூலி விவசாயிகள், வறிய விவசாயிகள், தொழிலாளர்கள் போன்ருேரின் வெகுஜன ஸ்தாபனங்களுக்கும் (சங்கங்கள்), தேசிய விடுதலை இயக்கத்திற்குமான உறவு எப்படி இருக்க வேண்டும்? என்ற கேள்விகளுடன் ஈழம் 7வது இதழில் கருத்து விவாதத்தின் தொடக்கமாக கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. 'நூறு மலர்கள் மலரட்டும், நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும்' என்னும் விமர்சன அணுகுமுறைக்கு ஏற்ப, இது குறித்த எமது பொதுவான கருத்துக்களையும் தெரிவிக்க முற்பட்டுள்ளோம். இவ்வாறுன கருத்துப் போராட்டங்கள் மூலமே பொதுவான உடன்பாடுகளுக்கு வரமுடியும் என்று நாம் நம்புகிருேம். அவ்வாறே செயல்பட்டும் வருகிருேம்.

## வர்க்கப் போராட்டமே சமுதாய வரலாற்றை உந்திச் செல்கிறது

பூமியில் உயிரினங்கள் தோற்றம் பெற்று அவற்றின் பரிணும (Evolution), விகார (Mutation) வளர்ச்சிகளினூடு மனிதக் குரங்கும், அதிலிருந்து ஆதி மனிதனும் தோற்றம் பெற்றனர். இக்காலத்தில் மனிதனது குறைவான தேவைகளைப் பூர்த்தி செய்ய கல்லாயுதம் போன்ற உற்பத்திக் கருவிகளை பயன்படுத்தி உழைப்பது (வேட்டை) போதுமானதாயிருந்தது. உற்பத்திக் கருவிகள் யாருக்கும் தனிப்பட்ட சொத்தாக மதிக்கப்படவில்லை. வர்க்கங்கள் நிலவவில்லை. சுரண்டலும் இல்லை. இதுவே புராதன கம்யூனிச சமூக அமைப்பாகும்.

பிற்பாடு தனிச் சொத்துடைமையின் தோற்றத்துடன் கூட்டுழைப்பு சிதைவடைந்து வர்க்கங்கள் தோன்றலாயின. மாறுகின்ற உற்பத்தி முறைமைக்கேற்ப வர்க்கங்களும் மாறுபட்டன. இந்த வர்க்கங்களுக்கிடையிலான போராட்டங்கள் (ஆயுதப் போராட்ட மூலமே இவை தீர்க்கப்பட்டன) மூலமே சமுதாய வரலாறு முன்னேறியுள்ளது. பண்ணையடிமை சமுதாயத்திலிருந்து நிலமானிய சமூகமும், நிலமானியத்திலிருந்து முதலாளிய சமூக அமைப்பும், முதலாளிய சமூக அமைப்பிலிருந்து சோசலிச சமூக அமைப்பும் பிற்போக்கு வர்க்கங்களை முற்போக்கு, புரட்சிகர வர்க்கங்கள் ஆயுதப் போராட்ட மூலம் தூக்கியெறிவதனுலேயே சமுதாய வரலாறு எழுதிச் செல்லப்படுகிறது. மனித சமூக முழுமையினதும் உன்னத வாழ் நிலையான கம்யூனிச சமூக அமைப்பும் கூட, வர்க்கப் போராட்ட வடிவங்களினூடு வர்க்கங்கள் இல்லாதொழிக்கப்படுவதனுலேயே உருவாக்கப்பட்டு, மனித சமூகம் உய்வடைகிறது.

நிலவி வருகின்ற சமூக அமைப்பை கருத்தில் கொண்டே, உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சிக்கு தடையாகவுள்ள பிற்போக்கு வர்க்கத்தை அல்லது வர்க்கங்களை தூக்கியெறிய புரட்சிகர வர்க்கம் அல்லது வர்க்கங்கள் நடாத்துவதாகவே வர்க்கப் போராட்டம் உள்ளது. எனவே நிலவி வருகின்ற சமூக,

www.tamilarangam.net



பொருளாதார அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வர்க்கப் போராட்டத்தின் போக்கு தீர்மானிக்கப்படுகிறது. இவ்விடத்தில் முதலாளிய சமுதாய அமைப்பில் சோசலிசத்தை நோக்கி நடாத்தப்படும் தொழிலாளி-முதலாளி வர்க்க மோதலுடன் வர்க்கப் போராட்டத்தை குறுக்கிக் கொள்வது இயக்க மறுப்பியல் பார்வையேயாகும். வர்க்கப் போராட்டங்களின் வளர்ச்சி சோசலிச சமூக அமைப்பை நோக்கிச் செல்வது அவசியமாகும். இது பல்வேறு நாடுகளிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## தேசிய விடுதலைப் போராட்டம் வர்க்கப் போராட்டத்தின் வெளிப்பாடே

இலங்கைத் தீவில் உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சிக்குத் தடையாகவுள்ளது நவகாலனிய சமூக அமைப்பே. ஏகாதிபத்தியங்களின் நிதி மூலதனத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள உள்நாட்டு தரகு முதலாளிகள் நவகாலனியத்தைப் பேணி, தங்களது எலும்புத் துண்டுகளை பாதுகாத்துக் கொள்கின்றனர். தற்போது நிலவிவரும் பாசிச U.N.P அரசு அமெரிக்க சார்பு தரகு முதலாளிகளின் அரசாக அமைந்து, பரந்து பட்ட மக்களை ஏகாதிபத்தியங்களும் பல்தேசியக் கம்பனிகளும் சுரண்ட வழி திறந்து விட்டுள்ளது நவகாலனியத்தின் கீழான மட்டுப் படுத்திய வாய்ப்புக்களுக்கான போட்டியில் சிங்கள மக்களுக்கு சில சலுகைகளை அளிப்பதன் மூலம், சிங்கள மக்களின் உண்மையான எதிரியான தன்னை மறைத்துக் கொண்டு, பிரச்சனைகளுக்கு காரணம் தமிழ் மக்களே எனக் காட்டி வருகிறது. இவ்வாறு உருவாக்கப்பட்ட பௌத்த சிங்கள பெரும் தேசிய உணர்வு நீண்ட காலத்திற்கு சிங்கள மக்களை கட்டிப்போட முடியாது. தமிழீழ விடுதலை, அவர்களதும் அடிப்படைப் பிரச்சினை நவகாலனியமே என்பதை உணர்த்தும்.

தமிழ் மக்கள் பிரிந்து செல்வது நவகாலனிய சந்தையில் ஒரு பகுதியை இழப்பதாகும். மேலும் சிங்கள மக்களும் தரகு முதலாளிய அரசிற்கும், நவகாலனியத்திற்கும் பலத்த அடியைக் கொடுக்க வழிவகுக்கும். எனவே தமிழீழப் பகுதியில் இராணுவ சர்வாதிகாரத்தை கட்டவிழ்த்து விட்டு பாசிச அடக்கு முறைகளினால் தமிழீழ மக்கள் அனைவரையும் அடக்கி வருகிறது. இந்நிலையில் தொழிலாளர்கள், விவசாயி—மீனவர், புத்திஜீவிகள், மூளை உழைப்பாளர், தேசிய முதலாளிகள் ஆகிய அனைத்து வர்க்கங்களும் போராடக் கிளர்ந்து உள்ளனர். நவகாலனியத்தின் பிடிப்பிலிருந்து தமிழீழத்தை விடுவிப்பதற்காக சிங்கள தரகு முதலாளிய அரசிற்கு எதிராகவே தேசிய விடுதலைப் போராட்டம் முன்னேறுகிறது. இப்பொழுது சிங்கள தரகு முதலாளிய வர்க்கத்தை எதிர்த்து, தொழிலாளி, விவசாயி—மீனவ, மூளை உழைப்பாளி புத்தி ஜீவிகள், தேசிய முதலாளி ஆகிய முற்போக்கு வர்க்கங்கள் கூட்டாக நடத்தும் வர்க்கப் போராட்டமாகவே தேசிய விடுதலைப் போராட்டம் உள்ளது. தமிழ் மக்களின் பிரதான எதிரி சிங்கள தரகு முதலாளிய அரசே. பிரதான முரண்பாடு தமிழ் தேசிய இனத்திற்கும் சிங்கள தரகு முதலாளிய அரசிற்கும் இடையிலான முரண்பாடாகவே உள்ளது. ஈழம் கூறுவது போல தமிழ், சிங்கள தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடு அல்ல.

## ஜனநாயகப் புரட்சியின் அம்சங்களையே கொண்டுள்ளது

தேசிய விடுதலைப் போராட்டத்தின் உடனடிக் கடமை நவகாலனியத்தை தூக்கி வீசி, உற்பத்திக் கருவிகளின் மீதான தளைகளை விடுத்து, அவற்றின் வளர்ச்சியை துரிதப் படுத்துவதே. இதன் பொருள் தமிழீழ சமூக அமைப்பின் மேலுள்ள நவகாலனிய தளைகளை அறுத்தெறிந்து, உள்ள நிலைமைகளுக்கேற்ப வளர்ச்சியை ஊக்குவிப்பதே. இதன் பொருட்டு தனியுடைமையை ஆரம்பத்தில் அனுமதிக்க வேண்டும். இது உற்பத்திக் கருவிகளின் மீது சமூகவுடைமையை நிலைநாட்டும் சோசலிசப் புரட்சியாகவன்றி, அவற்றின் தனியுடைமையை வளர்ச்சியடையச் செய்வதாகவேயுள்ளது. இது ஜனநாயகப்

www.tamilarangam.net



புரட்சியின் அம்சமே. இது பழைய வகையான ஜனநாயகப் புரட்சி போன்று தேசிய முதலாளிய தலைமையின் கீழ் நிகழ முடியாது. ஏனெனில் நவகாலனியத்தின் கீழ் நசுக்குண்டு தேசிய முதலாளியம் பலவீனமாகவேயுள்ளது.

தேசிய விடுதலைப் போராட்டத்தின்வெற்றிக்கு பெரும்பாலான மக்களை அணிதிரட்டுவதும், அவர்களது நிலைப்பாடுகளுக்கேற்ப சரியான நிலைகளில் நிறுத்துவதும் அவசியம். அதன் மூலமே தேசிய விடுதலைப் போராட்டத்தை இறுதி வெற்றிவரை ஊசலாட்டமின்றி செலுத்த முடியும். தமிழீழ பொருளாதாரத்தின் பிரதான துறைகளான மீன் பிடியிலும் விவசாயத்திலும் ஈடுபட்டுள்ள தமிழீழ குடித்தொகையில் 60% வரையில் வாழும் விவசாயிகளும் மீனவர்களுமே போராட்டத்தின் பிரதான சக்தியாயமைகின்றனர். தமிழீழ தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் சிறியளவிலும் தனது கடமைகளைப்பற்றி அறியாதுள்ளது. எனினும் சர்வதேசப் படிப்பினைகளைத் தொகுத்து போராட்டத்தில் முன்னிற்க புதிய தலைமுறையொன்றை கட்டியெழுப்புவது அவசியம். இன்னும் மூளை உழைப்பாளிகளும், தேசிய முதலாளிகளும் கூட போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

இந்நிலையில் தொழிலாளர், விவசாயி—மீனவ வர்க்க கூட்டுறவின் அடிப்படையில் ஏனைய வர்க்கங்களை இணைத்த புதிய ஜனநாயகப் புரட்சியொன்றே முன்னெடுக்கப்பட முடியும். இதன் பொருட்டு புதிய ஜனநாயக 'தமிழீழ மக்கள் குடியரசு' என்ற முழக்கமே அனைத்து வர்க்கங்களையும் போராட்டத்திலீடுபடுத்தவும், தேசிய விடுதலைப் போராட்டத்தை இறுதிவரை நடாத்தவும் வழிகாட்டும். இதனை ஈழமும் ஏற்றுக் கொண்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது. இந்நிலையில் வர்க்கப் போராட்டத்தை எப்படி ஆரம்பிப்பது? என்பதைவிட, வர்க்கப் போராட்டத்தை ஆழப்படுத்தி சோசலிசத்தை நோக்கி முன்னேறுவது எப்படி? எப்படி என்பதே அர்த்த புஷ்டியான கேள்வி.

## மக்கள் திரளமைப்புக்களின் நோக்கமும், செயற்பாடுகளும்

மக்கள் திரளமைப்புக்கள் பொருளாதாரப் போராட்டங்களிலும் அன்றாடப்பிரச்சனைகளை எதிர்த்த போராட்டங்களிலும் ஈடுபடும் மக்களை அணிதிரட்டி போராட்டத்தை வெற்றிக்கு கொண்டு செல்லப் பயன்படுகின்றன. இத்தகைய போராட்டங்களில் கிடைக்கும் அனுபவங்களைத் தொகுத்து, படிப்பினைகளைப் பெற்று, பிரச்சனைகளுக்கான அடிப்படைக் காரணம் நிலவி வருகிற சமுதாய அமைப்பே, என்பதை உணர்ந்து சமுதாய அமைப்பை மாற்றும் நோக்குடனேயே அன்றாடப் போராட்டங்களில் ஈடுபட முடியும். இதனால் சமூதாய அமைப்பை மாற்றி, புதிய சமூக அமைப்பையும், புதிய அரசையும் உருவாக்கும் அரசியல் போராட்டத்துடன் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டியவை ஆகின்றன. எனவே மக்கள் திரளமைப்புக்கள் அன்றாடப் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக தன்னெழுச்சியாக போராட முற்படும் மக்கள் திரளை ஸ்தாபனமயப்படுத்தி வர்க்க உணர்வூட்டுவதுடன் அரசியல் போராட்டத்தை நோக்கியும் அணிதிரட்டுகின்றன.

மக்கள் திரளமைப்புக்கள் அரசியலைக் கைவிட்டு, பொருளாதாரக் கோரிக்கைகளுடன் தம்மைக் குறுக்கிக் கொள்ளும் போது பிற்போக்கு தலைமைகள் கையில் சிக்கவும் அவற்றின் பலத்தை இழந்து போகவும் நேரும். இதனாலே பிற்போக்கு தலைமைகள் பொருளாதார வாதத்தில் ஊறியனவாகவே மக்கள் திரளமைப்புக்களைக் கட்ட முயல்கின்றன. ஈழம் 7 கூறுவது போன்று இலங்கை தொழிலாளி வர்க்கமும் பொருளாதார வாதத்தின் பிடியில் சிக்கி பலதுண்டுகளாக உடைந்து, தனது வரலாற்றுக் கடமையை மறந்துள்ளது. வெறுமனே கூலிப் போராட்டங்களுடன் தம்மைக் குறுக்கிக் கொண்டதாலேயே தொழிலாளி வர்க்க விரோத தரகு முதலாளிய U.N.P. கூட தொழிற்சங்கங்களைக் கட்ட முடிந்துள்ளது. 'சந்தா முதலாளி' தொண்டமானும் கூட தொழிற்சங்

www.tamilarangam.net



கங்களை வைத்திருக்க முடிகிறது. எனவே மக்கள் திரளமைப்புக்களில் அரசியலை கைவிடுவது ஆபத்தானதும், பிற்போக்குக்கு சேவை செய்வதுமாகும்.

## தேசிய விடுதலைப் போராட்டத்தில் மக்கள் திரளமைப்புக்களின் பங்கு

பல்வேறு தொழிற்துறைகளிலும் தமது அன்றாடக் கோரிக்கைகளுக்காக போராட முன்வருகின்ற மக்களை அணிதிரட்டுவதும், அவர்களை அரசியல் மயப்படுத்துவதும் இன்றைய பணியாகின்றது. இன்று சிறு முதலாளிய தத்துவங்களால் 'புதிய' விளக்கங்களுடன், அரங்கிலுள்ள சுத்த இராணுவவாத இயக்கங்கள் 'மக்கள் போராட்டங்களை' முன்னெடுத்து வருகின்றனர். மக்களின் ஆதரவே போதும் என்ற வகையிலான 'போராட்டமே' தொடர்கிறது. இந்நிலையில் சாதாரண, உழைக்கும் மக்களை போராட்டத்தில் முன்னணியில் ஈடுபடுத்தி உண்மையான மக்கள் யுத்தத்தை ஆயுதமேந்திய போராட்டமாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. தேசிய விடுதலையை வென்றெடுத்து, வல்லரசுகளின் கைப்பொம்மை அரசாக தமது சொந்த தமிழ் மக்களையே வருத்துகின்ற பாசிச அரசுகள் உருவாவதைத் தடுத்து, சுதந்திர—சுயாதிபத்திய 'தமிழீழ மக்கள் குடியரசை' நிறுவ வேண்டியுள்ளது. இதன் பொருட்டு மக்களை ஸ்தாபன மயப்படுத்தல் மிகமிக அவசியமானது.

இவற்றின் பொருட்டு அன்றாடப் பிரச்சனைகளுக்காக போராடுகின்ற மக்களை ஸ்தாபன மயப்படுத்தி மக்கள் திரளமைப்புக்களை கட்ட வேண்டும். அன்றாடப் பிரச்சனைகளுக்கான போராட்டங்களில் கிடைக்கும் அனுபவங்களைத் தொகுத்து, படிப்பினைகளைப் பெற்று அப்பிரச்சனைகளுக்கான அடிப்படைக் காரணம் இந்த சமூக அமைப்பை இவற்றை நீக்க சமூக மாற்றமே நிச்சயமான தீர்வு என்று அரசியல் மயப்படுத்த வேண்டும். உதாரணமாக சந்தை வாய்ப்புக்காக போராடுகின்ற விவசாயியும்—மீனவனும்—நவகாலனிய அமைப்பும் தரகு முதலாளிய அரசுமே புதிய சந்தை உருவாவதை தடுக்கிறது என்பதையும், அவ்வாறான புதிய சந்தையை உருவாக்குவது தேசிய விடுதலைப் போராட்டத்துடனேயே இணைந்துள்ளது என்பதையும், தமிழீழத்திலும் கூட சுயாதீனமான புதிய சந்தை உருவாவதைத் தடுக்கும் நவகாலனியத்தையும் தமிழ் தரகு முதலாளியத்தையும் எதிர்த்து போரிடுவது அவசியம் என்பதையும்—உணரவைப்பது மக்கள் திரளமைப்பின் கடமையே. இதுபோன்றே விலைவாசியுயர்வு அபிவிருத்தியின்மை, ஏனைய சமூக பொருளாதார குறைபாடுகளிலுள்ள அரசியலையும் புரிய வைக்க வேண்டும். அதே போன்று மக்கள் மத்தியிலுள்ள பின்தங்கிய கலாச்சார முறைமையை எதிர்த்து புதிய ஜனநாயக கலாச்சாரத்தை உருவாக்குவதன் அவசியத்தையும் வலியுறுத்த வேண்டும். இவ்வாறான அரசியல் முன்வைப்பதன் மூலமே தேசிய விடுதலைப் போராட்டத்தை ஊசலாட்டமின்றி முன்னெடுத்துச் செல்லவும், மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்தவும் முடியும். இதன் பொருட்டு தற்போது விவசாயிகள் அமைப்பு, கடற்றொழிலாளர் அமைப்பு, பெண்கள் அமைப்பு, தொழிலாளர் அமைப்பு, அரசு ஊழியர் அமைப்பு, மாணவர் அமைப்பு ஆகியவை அவசியமான சில மக்கள் திரளமைப்புக்களாகும்.

மக்கள் திரளமைப்புக்கள் அன்றாடப் பிரச்சனைகளின் அடிப்படையிலேயே கட்டப்படுகின்றன. பரவலான மக்களைத் தட்டியெழுப்பி ஸ்தாபனமயப்படுத்தி வருகின்றன. அவற்றுள் சாதாரண, கஷ்டப்படும் மக்களின் தலைமை உள்ள போதே போராட்டத்தின் இறுதி வெற்றிவரை நின்று பிடிக்க முடியும். எவ்வாறு இத்தகைய தலைமையை வழங்குவது? சாதாரண கஷ்டப்படும் மக்கள் போராட்டங்களில் ஊக்கமாக ஈடுபடுவதன் மூலமும், ஊசலாட்டமின்றி சரியான வழி காட்டலளிப்பதன் மூலமே நிறுவ முடியும் என்பது அனுபவபூர்வமானது. இதன் பொருட்டு சாதாரண கஷ்டப்படும் மக்களை தட்டி எழுப்புவது அவசியமாகும் இத்தகைய சாதாரண மக்களின் தலைமையின் கீழான ஐக்கியப்பட்ட பொதுவான போராட்டத்தில் கிட்டும் அனுபவத்திலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொண்ட போதே,

www.tamilarangam.net



தமக்கு இடையிலான வர்க்கப் போராட்டங்களை, ஐக்கியமும் போராட்டமும் மூலம் இறுதி வெற்றிவரை முன்னெடுக்க முடியும். இங்கு ஐக்கியமும் போராட்டமும் என்ற போராட்ட வடிவமே மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைத் தீர்க்கப் பயன்படும். இவ் விடத்தில் ஈழம் 7 கூறுவது போன்று விவசாயிகளுள் வர்க்க அடிப்படையில் சங்கங்களை அமைப்பது, விவசாயிகளின் போராட்ட சக்தியை சிதறடிக்கவே பயன்படும். இது இலங்கைத் தொழிலாளி வர்க்கம் போன்று வேறுபட்ட பிற்போக்கு சக்திகளின், கைகளில் விவசாயிகள் சிக்கவும் சீரழியவுமே வழிவகுக்கும். ஏனெனில் விவசாயத்தில் பெருமளவு சிறுவுடைமை முறையே நிலவுவதனல் இவர்களை பிற்போக்காளர் தமது வலையில் வீழ்த்துவது சுலபமாகும். ஈழம் குறிப்பிடும் வர்க்கப் போராட்டத்தை மட்டும் கருத்தில் கொண்டு தனித்தனியான கூலி வறிய விவசாயி சங்கங்களை மட்டும் கட்டும் இடது தீவிரவாதம், நடைமுறையில் மேற்கூறிய வலது சந்தர்ப்பவாதத்திற்கு விவசாயிகளைப் பலியாக்கவே துணைபோகும் என்பதில் ஐயமில்லை.

## மக்கள் திரளமைப்புக்களின் போராட்ட முறையும், ஸ்தாபன வடிவமும்

குறிப்பிட்ட யதார்த்த நிலைமைகளுக்கேற்பவே போராட்ட வழி முறைகள் தீர்மானிக்கப்படுகின்றன. போராட்ட வழிமுறைகளை நிறைவேற்றவே ஸ்தாபன வடிவங்கள் பயன்படுகின்றன. இது எல்லாப் போராட்டங்களுக்கும், ஸ்தாபன வடிவங்களுக்கும் பொருந்தும். இலங்கையில் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களும் பொருளாதார அன்றாடக் கோரிக்கைகளும் பாசிச அரசினல் வெறித்தனமாக அடக்கப்பட்டு வருகின்றன. படிப்படியாக ஜனநாயகம் துடைத்தெறியப்பட்டு வருகிறது. இந்த இராணுவ அடக்கு முறைகளைத் தாக்குப் பிடித்து முன்னேறத்தக்க போராட்ட வழிமுறைகளும்ஸ்தாபன வடிவங்களும் அவசியமாகும். பரந்து பட்ட மக்கள் திரளை ஸ்தாபனமயப்படுத்தி போராட்டங்களை முன்னெடுக்க இவை துணைபுரிய வேண்டும். சட்டபூர்வமாக செயற்படக்கூடிய அனைத்து வழிகளையும் பயன்படுத்துவது அவசியம். ஆயினும் அவற்றின் உள்ளேயே தமது செயற்பாடுகளைக் குறுக்கிக்கொள்ளாதிருக்க வேண்டும்.

## மக்கள் திரளமைப்புகளுக்கும் தேசிய விடுதலை இயக்கத்திற்குமான உறவு

மேற்குறித்தவாறு தனித்துவமாக கட்டப்படும் மக்கள் திரளமைப்புகளுக்கு சரியான அரசியல் வழிகாட்டல் அவசியம். சரியான அணுகுமுறையுடன் அரசியல் வழிகாட்டல் இல்லாதவிடத்து போராட்ட உணர்வு தளர்ந்து சிதையவும், பொருளாதார வாதத்தில் சிக்கி சீரழியவுமே வழி வகுக்கும். இத்தகைய அரசியல் தலைமையையும், மக்கள் திரளமைப்பிற்கான நடைமுறைத் தந்திரங்களை (tactics) வகுத்தளிப்பதன் மூலம் அவற்றிற்கு சரியான அரசியல் வழிகாட்டலையும் அரசியல் இயக்கம் வழங்க முடியும்.

இங்கு தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வர்க்கங்களும், பல்வேறு வர்க்க சித்தாந்தங்களும் செயற்படுகின்றன. இதில் பல்வேறு சித்தாந்த போராட்ட வழிமுறை (strategy), சாதாரண நடைமுறை, ஸ்தாபனக் கோட்பாடுகள் காரணமாக பல்வேறு விடுதலை இயக்கங்கள் தோன்றியுள்ளன. (இவ்விதம் தம் மத்தியிலான சித்தாந்த போராட்ட வழிமுறை, நடைமுறை, ஸ்தாபன கோட்பாடு சம்பந்தப்பட்ட முரண்பாடுகளை விமர்சன, சுயவிமர்சன மூலமே தீர்க்க முடியுமென இலக்கு 2ல் குறிப்பிடப் பட்டுள்ளது) இந்நிலையில் மேற்கூறியது போன்று தனித்துவமான மக்கள் திரளமைப்புக்களை கட்டவேண்டியது குறித்து சில விடுதலை இயக்கங்களே அக்கறை கொண்டுள்ளன. ஏனையவை மக்கள் திரளமைப்புகளின் முக்கியத்துவம் குறித்தோ அவற்றின் பயன்பாடு குறித்தோ தெளிவான கருத்துக்கள் எதனையும் மக்கள் மத்தியில் முன்வைக்கவில்லை. சில மக்கள் திரளமைப்புக்களை தமது படை அணிக்கு ஆள் திரட்டும் மூலங்களாக கருதுகின்றன இந்நிலையில் அவசியமான திரளமைப்புக்கள் பற்றிய தமது கருத்துக்களை மக்கள் மத்தியில் முன்வைத்து சீர்செய்து பொதுவான உடன்பாடொன்றிற்கு வர வேண்டும். (அவ்வாறே ஏனைய பிரச்சனைகளையும் தீர்க்க முடியுமென இலக்கு கருதுகிறது)

தேசிய விடுதலைப் போராட்டத்தில் மக்கள் திரளமைப்புக்கள்மீது அரசியல் தலைமையை எவ்வாறு செலுத்துவது என்பது பிரச்னைக்குரிய கேள்வியாகவுள்ளது. இவ்விடயத்தில் இரண்டு அம்சங்களை கணக்கில் எடுக்க வேண்டியுள்ளது. ஒன்று—அக்கறை

www.tamilarangam.net



யுள்ள ஒவ்வொரு தேசிய விடுதலை இயக்கமும் தனித்தனியே தத்தமக்கென மக்கள் திரளமைப்புக்களைக் கட்டுவதால் குறிப்பிட்ட மக்கள் திரளின் பலம் குறைக்கப்படும். எனினும் சரியானவழிகாட்டலுள்ள இயக்கம் வழி நடத்தும்போது பலம் குறைவான போதும் ஊக்கமான பங்காற்ற முடியும் என்பது உண்மையே. இரண்டு—மக்கள் திரளின் பலத்தைக் குறைக்காத விதத்தில் தனித்துவமான மக்கள் திரளமைப்பு ஒன்றில் அரசியல் தலைமையை கூட்டாக வழங்குதல். தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலம் தீர்வு காண வேண்டி அன்றாடப் பிரச்சனைகளின் பொருட்டு கட்டப்படும் மக்கள் திரளமைப்புக்களில் கூட்டுத் தலைமையை சரியான அரசியல் வழிகாட்டல் மூலமே வழங்க முடியும். இதன் பொருட்டு நடைமுறையிலிருந்து தொகுத்து நடைமுறைக்கான வழிகாட்டலை அளித்தே தமது தலைமையைச் செலுத்த முடியும். மாறாக இயக்கங்கள் குறுக்கு வழிகளைப் பாவித்து தமது கைப்பொம்மைகளாக மாற்ற முற்பட்டால் இவை செயலற்றுப் போகும். உள்முரண்பாடுகளும் பகைமையுணர்வும் வளர்ந்து மக்கள்திரளமைப்புக்களை சீரழித்து சிதைத்துவிடும். எனவே தமது தெளிவான வேலைத் திட்டங்களை மக்கள் முன்னும் மக்கள் திரளமைப்புக்கள், இயக்கங்கள் மத்தியிலும் வைத்து விமர்சன-சுயவிமர்சன மூலம் சீர்செய்து மக்கள் திரளமைப்புக்களை சரியாக வழிநடத்தலே சரியானதாகும்.

இன்று பொதுவாக மக்கள் ஸ்தாபனமயப்படுத்தப்படாத சூழ்நிலையில், மக்களை அமைப்பாக்கும் நோக்குடன் மக்கள் திரளமைப்புக்களை கட்டவேண்டியுள்ளது. இதன் பொருட்டு பொதுவான அரசியல் நோக்கங்களை முன் வைக்கிறோம். விமர்சன மூலமே பொதுவான உடன்பாடுகளுக்கு வரமுடியும். அதுவே நீண்ட காலத்திற்கு நின்று பிடிக்கும்.

பொருளாதாரக் கோரிக்கைகளின் பொருட்டு கலாச்சார சமூக குறைபாடுகளை எதிர்த்து நாளாந்த பிரச்னைகளுக்காக போராடுவதற்கென கட்டப்படும் மக்கள் திரளமைப்புக்கள் பின்வரும் அரசியல் கோரிக்கைகளை தமது ஸ்தாபன உள்மட்டத்தில் வலியுறுத்த வேண்டும்.

அ. தற்போதுள்ள பல்வேறு துறைகளிலும் காணப்படும் பிரச்சினைகளுக்கும் சமுதாய கலாச்சார குறைபாடுகளிற்கும் அடிப்படைக் காரணம் தற்போது நிலவிவரும் நவகாலனிய சமூகஅமைப்பே.

ஆ. தமது நாளாந்த கோரிக்கைகளுக்காக போராடுவதன் மூலம் பரவலான மக்களை ஸ்தாபனமயப்படுத்தி பிரச்சனைகளின் மூலவேரான நவகாலனிய சமூக அமைப்பை தகர்த்தெறிவது அவசியம். அதன் மூலமே தற்போதைய பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு காணப்பட முடியும்.

இ. நவகாலனிய சமூக அமைப்பை தகர்த்து, அதனிடத்தில் புதிய ஜனநாயக சமூக அமைப்பை நிறுவும் பொருட்டு, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தினை வழி நடாத்துவதும், அதில் பங்கு பெறுவதும் அவசியம்.

ஈ. மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்தும் விதத்தில், வல்லரசுகளின் கைகளில் சிக்காத சுதந்திர-சுயாதிபத்திய தமிழீழத்தை அமைப்பதும், தமிழீழத்தில் வரக்கூடிய தமிழ் தரகு முதலாளிய வடிவிலான நவகாலனியத்தை எதிர்த்துப் போராடுவதும் அவசியம்.

உ. தீண்டாமை ஒழிப்பு, பெண்விடுதலை போன்றவற்றை ஆதரித்தலும் அவற்றின் பொருட்டு ஆதரவாக போராட்டங்களில் ஈடுபடலும் புதிய கலாச்சாரமொன்றை உருவாக்கப் போரிடலும் அவசியம்.

ஊ. சிங்கள மக்களினதும், உலக நாடுகளினதும் பல்வேறு புரட்சிகர மக்களதும், மக்கள் திரளமைப்புக்களுடன் சகோதர உறவுகளைக் கொண்டிருப்பதும் அவற்றின் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதும் அவசியம்.

பல்வேறு சிந்தாந்த, போராட்ட வழிமுறை, சாதாரண நடைமுறை, ஸ்தாபனக் கோட்பாட்டுப் பிரச்சனைகளில் விமர்சன-சுயவிமர்சன முறையால் ஐக்கியத்தையும் போராட்டத்தினையும் கடைப்பிடித்து பொதுவான உடன்பாடுகளுக்கு வருவதில் இலக்கு அயராது உழைக்கும்.


" நூறு பூக்கள் மலரட்டும்,
நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும் "

சரியான பாதை ஒன்று புலப்படட்டும்.

www.tamilarangam.net



# எதிரிகளுக்கும், துரோகிகளுக்கும் எதிராக திருப்பப்பட வேண்டிய துப்பாக்கி விடுதலைப் போராளிகளுக்கு எதிராக திருப்பப்படுவது ஏன்?



**'ஆட்களும் அடிக்கடி நகர்கிற தெருவில்'**

**அன்ருெரு சுதந்தரம்**

**'வயல் வரப்பில் விழி நிமிர்த்தி'**

**இறை குமாரன், உமை குமாரன்**

**இன்னும்**

**ஓபரேய்தேவன்... இவர்கள் வரிசையில்**

**இன்று மனோ மாஸ்டர்**

விடுதலைப் போராளிகளுக்கிடையிலுள்ள முரண்பாடுகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும்; கொள்ளப்பட முடியும் அவ்வாறே இயக்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளும், தீர்க்கப்பட முடியும். கொலைகளோ ஆயுதம் ஏந்திய எதிர்ப்போ இவற்றிற்கு ஒருபோதும் தீர்வாக முடியாது.

ஆனால் எமது விடுதலை இயக்கங்களில் சில நீண்டகால, பொறுமையான போராட்ட வழி முறைகளை அறியாது ஆராயாது வெறும் உணர்ச்சியூட்டும் பேச்சுக்களால் ஆயுதக் கவர்ச்சியில் மயங்கி ஆயுதம் தூக்க முற்பட்டன. அப்படியான இவர்கள் கருத்து வேற்றுமை ஏற்படும் போது அதை எவ்வாறு பேசித் தீர்த்துக் கொள்வது என்று வழிவகை தெரியாமல் நீண்டகாலமாக தம்முடன் ஒன்ருக இருந்து ஒன்ருக பழகிய தோழர்களையே சுட்டுக்கொல்லும் நடவடிக்கையில் இறங்குகின்றனர்.

கருத்து வேற்றுமை ஏற்படும் போது கூட சரியான அணுகுமுறைகளைக் கைக் கொள்ளாமல், மக்கள் சக்தியை நம்பாது ஆயுதக்கவர்ச்சியின் மிச்ச சொச்சங்களால் வரம்பு மீறித் தூற்றுவதும், சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதும், அரசியலை முன்வையாது ஆயுதத்தை பிரதானமாக கொள்வதினுல் ஆள் கடத்தல், வேவு பார்த்தல், தாக்குதல், கட்டி வைத்தல், சுட்டுக் கொல்லல் என்பன போன்ற செயல்களிலும் இறங்குகிருர்கள்.

இப்படியான விடுதலைப் போராளிகளைச் சுட்டுக் கொல்லும் வரிசையில் இப்போ சுட்டுக் கொல்வப்பட்ட விடுதலைப் போராளி மனோ மாஸ்டர் (பஞ்சலிங்கம்) ஆவார். இவர் 1979-ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஒரு போராளியாக இணைத்துக் கொண்டார். விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தோழர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களிடையே மார்க்சிய நூல்களை கற்கும் ஆர்வத்தைத்தூண்டி மார்க்சியத்தை கற்றுக் கொடுக்க முன் முயற்சி எடுத்தார். 1980-ம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து ஆரம்பத்தில் புலிகளை ஆதரித்தாலும் பின் அவர்களுடைய நடவடிக்கையை ஏற்காமல் சிறிது காலம் ஒதுங்கி இருந்து விட்டு மீண்டும் 1983-ம் ஆண்டு யூலைக் கலவரத்தைத் தொடர்ந்து தமிழீழ விடுதலை இயக்கத்தில் சேர்ந்து செயல்பட்டார். அண்மையில் அந்த இயக்கத்தில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து வெளியேறிய பிரிவில் பிரதான மானவராக இருந்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சரியான நிலைப்பாட்டை கொண்ட இயக்கங்கள் இல்லாததினாலும், இயக்கங்களைப்பற்றிய தவறான கணிப்பினாலும் அங்குமிங்குமாக அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்த இவர் அண்மையில் பருத்தித்துறையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

விடுதலைப் போராளியான இவர் எதற்காக சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார், என்பது தெரியவில்லை. இக்கொலைக்கு இன்றுவரை யாரும் உரிமை கோரவில்லை. இது கொலையை விட மிகவும் கேடுகெட்ட வெட்கங்கெட்ட செயலாகும். இராணுவம் கூட இப்படியான கொலைகளை செய்துவிட்டு இயக்கங்களுக்கிடையிலான மோதலில் மரணம் என்று அறிவிக்கத் தொடங்கியுள்ளது. மனோ மாஸ்டரின் கொலைக்கு பொறுப்பானவர்கள் தம்மை இனங்காட்டாவிடினும் வரலாறு இவர்களை இனம் காட்டும்.

எப்படியாயினும் இக்கோரக் கொலைக்கு பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும் இது ஒரு ஈனத்தனமான செய்கையாகும். இத்தகைய ஈனத்தனமான செய்கைகளை அதை யார் செய்தாலும் இலக்கு மிக வன்மையாககண்டிக்கிறது.

மக்களுக்கு முன் ஒரு நாள் அம்பலமாகப் போகும் பேர்வழிகள் தான் இந்த கொலைகாரப் பேர்வழிகள். அப்போது இந்தக்கொலைகாரப் பேர்வழிகளுக்கு மக்கள் சரியான பாடத்தை போதிப்பார்கள் அப்போது இவர்களை எந்தத் துப்பாக்கியும் பாதுகாக்கப் போவது கிடையாது.

# ● ● தோழர் மகேஸ்வரநாதனை நினைவு கூருவோம்!

தோழர் மகேஸ்வரநாதன் கடந்த 4 ஆண்டுகளாக தமிழீழ விடுதலைக்காக உழைத்து வந்தவர். ஆரம்பத்தில் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியுடன் இணைந்து செயற்பட்டார். தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியில் இணைந்திருந்த காலத்தில் வெகுஜன வேலைகளில் முன்னின்று ஈடுபட்டதுடன், இயக்க நடவடிக்கைகள் பலவற்றிலும் உணர்வு பூர்வமாகவும், உற்சாகத்துடனும் பங்கேற்று முன்னணித் தோழராகத் திகழ்ந்தார். 1983 யூலைக் கலவரத்தைத் தொடர்ந்து கருத்து வேறுபாடு காரணமாக த. ம. ஜ. முன்னணியை விட்டு விலகி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து கொண்டார். த வி. புலிகள் இயக்கத்துடனும் உற்சாகமாகச் செயற்பட்ட இவர், அண்மையில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

தோழர் மகேஸ்வர நாதனிற்கு இலக்கு தன் வீர அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அவர்தம் பணியை நினைவு கூர்ந்தும் கொள்கிறது.


**விதி தீர்க்கும் சமரில் பலியானீர் நீர்**
**வேட்பின்றி மக்கள் பால் கொண்ட அன்பால்**
**முடிந்தவை யாவும் ஈந்தீர் அவர்க்காய்**
**அவர் வாழ்வு, மானம் விடுதலைக்காய்**

● தமிழீழ விடுதலைத் தீவிர வாதிகள் (T.E.L.E) என்ற இயக்கத்தினைச் சேர்ந்த ஜெதீசன் (ஜெகன்) சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவருக்கு 'இலக்கு' தன் வீர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்னையர் முன்னணி ஊர்வலம்!



வல்வெட்டித் துறை, நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான இளைஞர்களையும் சிறுவர்களையும் கைது செய்து காலியிலுள்ள 'பூசா' இராணுவ நிலையத்திற்கு கொண்டு சென்றதை எதிர்த்தும் அவர்களை விடுதலைச் செய்யக் கோரியும் 24-8-84-இல் 'அன்னையர் முன்னணி' நடாத்திய ஊர்வலத்தின் ஒரு பகுதியை மேலே காணலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உன் மண்ணும் என் மண்ணும்

'என்மண், என்மண்' ணென்று
எப்போதும் நீ சொல்வாய்
கோடேறி வழக்குரைப்பாய்
மண்ணுக்கும் நீருக்கும் வேலி,
மதிற்சுவர் எழுப்பி
வராமல் நீ மறிப்பாய்

இப்போதோ,
'இது நம்மண்' என்கின்ருய்
'எழுக', என ஆர்க்கின்ருய்

நன்று. ஒரு சிறு கேள்வி.
நீ கூறும் 'நம்மண்' இது
ஆண்டோய்ந்த பரம்பரையார்
மீண்டொருக்கால் ஆளவர
வேண்டி நமை வேள்வியிலே
ஆடாகப் பலியிடவும்
அன்னியருக் கெல்லாமே
அடமானம் வைத்திருந்து
அவர் தயவில் ஆள்வதற்கு

ஆசையுறும் மண்ணுமோ?
இல்லை யெனில்
விடுவிக்கப் படை கொணர்ந்த
'ராட்சகரின்' காலடியின்
விடுபடற்கு மறுபடியும்
வெகுண்டெழுந்த காம்போஜம்,
ஆப்கானிஸ்தான் போலொன்ருே?
எல்சல்வடோர் போன்ருே?
பறிபோன பலஸ்தீன மண்போன்ருே?

மாருக
சியோனிசத்தின் இஸ்ரேலோ?
ஆபிரிக்கத் தென் முனையில்
வெள்ளை நிறவெறி உரிமை
கொண்டாடும் மண்போன்ருே?
அடியடியாய் முடியாண்டார்
நீண்ட நெடு வரலாற்றில்
குடுமிப்பிடிச்சண்டைகளில்
குருதியினுற் சேருன
செம்மண்ணே, எம்மண்ணே?

நீ கூறும் மண் அதனை
உழுபவனின் மண்ணென்ருல்
அவனுக்கே சேரட்டும்
முன்னுலே நிற்கின்ற
ஆண்டைகளின் பங்கென்ன?

-சிவசேகரத்தின் 'நதிக்கரை மூங்கில்'
என்ற கவிதைத் தொகுதியிலிருந்து

(*) காம்போஜம் — இன்றைய கம்பூச்சியா,
பழைய கம்போடியா